**Zoology 87 A/L**
திரு. நாகநாதன்
முன்னுவியல்
Sat., Sun.: 8.30–9.30
Tues., Thu: 3.00–5.00
பாகுபாடு
Sat. & Sun: 10.30–11.30
Saturday: 6.30–8.30
**New Master**
INSTITUTE
B. M.C. Lane,
JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

**Botany 87 A/L**
திரு. குகாதரன்
Sat. & Sundays
9.30–10.30
இனப்பெருக்கம்
2.30–3.30
பிறப்புரிமையியல்
**New Master Institute**
B M.C Lane, JAFFNA

மலர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு தை மீ 4 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா அவ் பிறை 16 (17-01-1987) SANJEAVY. REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :52

## கருத்துக் கலசம்

### பனையிலிருந்து பெற்றோல்!

பனையிலிருந்து பெற்றோல்!

என்ன இது! பெற்றோல் உட்பட எரிபொருள்களுக்கு, குடாநாட்டில் தடை விதிக்கப்பட்ட இந்நேரத்தில் இப்படி ஒரு இனிப்பான செய்தியா என்று திகைக்காதீர்கள்!

எங்கள் பிரதேசம் எங்கும் உள்ள பனைகள் தரும் கள்ளிலிருந்து தரமான மதுசாரம் தயாரிக்கலாம். அந்த மதுசாரத்தைப் பெற்றோலுக்குப் பதிலாக வாகனங்களுக்குப்பாவித்து அவற்றை இயக்கலாம்.

இத்தனை காலமாக ஏன் இதைச் செய்யாமல் இருந்தோம் என்று கவலைப் படுகிறீர்கள் என்பது புலனாகிறது.

எங்களிடம் உள்ள வளங்களை நாம் தக்கபடி ஆராய்ச்சி செய்து கண்டறிந்து, பயன்படுத்தி இருப்பின் எம்கள்மீது பொருளாதாரத்தடை விதித்து அரசியல் நெருக்குதல் தர அரசு முனைந்திருக்க முடியாது. அதன் ஜம்பம் பலிக்கவும் முடியாது.

பனங்கள்ளிலிருந்து மதுசாரம் பெறுவதற்கு உதவுவது எது? உயிரியல் தொழில் நுட்பம். அப்படி என்றால் என்ன?

அதனை யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் உள்ளே விளக்கமாக எழுதியிருக்கிறார்படியுங்கள்

யாழ். பல்கலைக் கழகத்தில் உயிரியல் தொழில்நுட்ப நெறி நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படுகிறது.

உயிரியல் தொழில் நுட்பத்தைப் பயிற்றுவிப்பதன் மூலம், அது சம்பந்தமாக ஆராய்ச்சிகள் செய்வதின் மூலம் எங்கள் பொருளாதாரத்தை விருத்தி செய்ய அத்திவாரம் இடலாம்.

விவசாயம், மருத்துவம், கைத்தொழில் உற்பத்தி ஆகிய பல துறைகளையும் விருத்தி செய்ய உயிரியல் தொழில் நுட்பம் உதவும் எனக் காண்கிறோம்.

கிருமிநாசினி, பசளை என்பவற்றுக்குப் பணத்தைச் செலவழிப்பதால் பயிர்களின் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. ஆனால் அவை இல்லாமலே உற்பத்தியை அதிகரித்துச் செலவைக் குறைக்க உதவி புரியும் வல்லமை உயிரியல் தொழில் நுட்பத்துக்கு உண்டு!

சோளத்திலிருந்து சீனி. பனையிலிருந்து மதுசாரம். மரக்கறிக் கழிவிலிருந்து மதுசாரம்.

இப்படியான பல மாற்று வாய்ப்புகளை ஏற்படுத்தும் வல்லமையும் உயிரியல் தொழில்நுட்பத்துக்கு உண்டு.

உயிரியல் தொழில் நுட்பம் சம்பந்தமான போதனை பெரும் வரப்பிரசாதம். ஆனால் அது வெறும் ஏட்டு —

(8-ம் பக்கம் பார்க்க)

## செயலகம் முன் மறியற் போர்!

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ் செயலகம் முன் நேற்று ஆயிரக்கணக்கான ஓய்வூதியர்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

அடகு வைத்தோர் சங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றி தமது ஒய்வூதியப் பணத்தினை கூடியவிரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஒய்வூதியம்பெறுவோர் அமைப்பின் ஏற்பாட்டில் காலை ஏழுமணி தொடக்கம் நடைபெற்ற இந்த மறியற்போராட்டத்தில் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி பெருந்தொகையானோர் பங்குபற்றினர்

மறியற்போர் காரணமாக செயலகத்துக்கு வந்த ஊழியர்கள் உள்ளே செல்லமுடியாது வெளியே காத்து நின்று விட்டு வீடு திரும்பினர்.

செயலகத்தின் வாசலில் பல சுலோக அட்டைகளும் தொங்கவிடப் பட்டிருந்தன. (உ-10)

## விற்பனைத் திணைக்கள ஊழியரும் மறியற் போர்

யாழ்ப்பாணம், ஜன, 17

யாழ் - விற்பனைத் திணைக்கள ஊழியர்களும் நேற்று மறியற் போராட்டம் நடத்தினர்.

விற்பனைத் திணைக்களத்தில் சமயாசமய ஊழியர்களாக கடமையாற்றிய 72 பேரைத் திணைக்களம் வேலை நிறுத்தியதை அடுத்தே ஊழியர்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

யாழ்- கன்னாதிட்டிச் சந்தியில் உள்ள விற்பனைத் திணைக்கள தலைமைக் காரியாலயத்தின் முன்பாக ஊழியர்கள் மறியல் நடத்தினர். (உ-10)

## திடீரென 'அவுட்' ஆகும் தொலைபேசிகள்!

யாழ்ப்பாணம், ஜனவரி 17

யாழ் குடாநாட்டில் உள்ள பல தொலைபேசிகள் திடீர் திடீர் என "அவுட்" ஆகுகின்றன.

யாழ் தொலைத்தொடர்பு திணைக்களத்தினுள் சிப்பாய்கள் புகுந்து முகாமிட்டதை அடுத்தே இக்கோளாறு ஏற்பட்டுள்ளது.

பல அரச ஊழியர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோரின் தொலைபேசிகளும் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

யாழ்ப்பாணத்தில் உள்ள சில உள்நாட்டு வெளிநாட்டு தொலைத்தொடர்பு நிறுவனங்களின் தொலைபேசிகளும் துண்டிக்கப் பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## குருக்கள் மடத்தில் தேடுதல்; ஐவர் பலி! 200 பேர் கைதாகினர்

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்பு குருக்கள் மடத்தில் நேற்றுக் காலை நடந்த தேடுதலின் போது ஐந்துபேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதுபற்றிய விவரம் வருமாறு!

நேற்றுக்காலை 6 மணியளவில் ஆயுதபடையினர் குருக்கள் மடத்தில் வீடுவீடாகத் தேடுதல் நடத்தினர். அப்போது படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சைக்கிள் வண்டியில் சென்றுகொண்டிருந்த சிவலிங்கம் என்ற 24 வயது தமிழ் இளைஞர் உயிரிழந்தார்.

வயலுக்கு உரம் எடுத்துக்கொண்டு செல்லுகையிலேயே இவர் உயிரிழந்தார்.

பாடசாலை ஆசிரியரான வன்னியசிங்கம் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தார். இவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் பின்னர் அனுமதிக்கப்பட்டார்.

குருக்கள் மடத்தில் இருந்து அம்பிலாந்துறைக்கு வாவியில் தோணி மூலம் சென்று கொண்டு இருந்த பயணிகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் சூடுபட்டு நீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

சுமார் 200 தமிழர்கள் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டு கல்லடி முகாமுக்குக் கொண்டு போகப்பட்டனர், (உ-எ-21)

## ஆயுதங்களைக் கீழே போடும்வரை பேச்சில்லை

### காமினி தகவல்

கொழும்பு, ஜன. 17

தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போடும் வரை அவர்களுடன் பேச்சுக்களை இலங்கை நடத்தமாட்டாது.

இதனை இந்திய தரப்புக்குத் தெரிவித்தேன்.

புதுடில்லிப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய பின்னர் காணி அமைச்சர் காமினி திஸநாயகா முன் கண்டவாறு தெரிவித்தார்.

தமது புதுடில்லி விஜயம் பற்றிய விவரங்களை அவர் நேற்று கொழும்புப் பத்திரிகைகளின் செய்தி ஆசிரியர்கள் மத்தியில் வெளியிட்டார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது:

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கருத்து வேற்றுமை எதுவும் இல்லை.

டிசம்பர் 19 ஆம் திகதிய நிலைப்பாட்டில் இருந்து மேலும் பேச்சுக்களைத் தொடரக் கூடிய வாய்ப்பு தற்போது ஏற்

(8-ஆம் பக்கம் பார்க்க)

## ★ எரிபொருள் விநியோகம்:

# தடை நீடிக்குமாயின் தெற்கில் தாக்குதல்

### புலிகள் நடத்துவர் என கிட்டு எச்சரிக்கை

கொழும்பு, ஜனவரி, 17

வடக்கிற்கான எரிபொருள் விநியோகத் தடை நீடிக்குமாயின் தெற்கில் பொருளாதார இலக்குகள் மீது தாக்குதல் நடத்த புலிகள் தயக்கம் காட்ட மாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ். மாவட்ட தளபதி கிட்டு இப்படி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

எரிபொருள் மற்றும் உணவுப்பொருள் மீதான தடையினை இலங்கை அரசு தொடர்ந்து அமுல் நடத்தினால் தென் இலங்கையில்உள்ள பொருளாதார இலக்குகளைத் தாக்குவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயக்கம் காட்டமாட்டார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு. கிட்டு முன் கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருப்பதாக சர்வதேச செய்தி ஸ்தாபனமான ராய்ட்டர் நேற்று அறிவித்தது

(8-ஆம் பக்கம் பார்க்க)

## தற்போது நீக்கும் அறிகுறி இல்லை!

கொழும்பு, ஜன. 17

வடபகுதி மீதான எரிபொருள் தடை இப்போதைக்கு விலக்கப்பட மாட்டாது.

இப்படி தேசியப் பாதுகாப்புச்சபை தீர்மானித்து இருப்பதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இதனிடையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில்—

"சிவில் நிர்வாக நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் கைவிடும்வரை, எரிபொருள் தடை நீக்கப்படமாட்டாது" என்று தெரிவித்திருக்கிறார்.

ஆனால், குடாநாட்டில் உள்ள தீவுப்பகுதி மக்களுக்கு உணவுப் பொருட்களை தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு ஏற்ற வழிவகைகள் செய்யப் படும் என்றும் அமைச்சர் அத்துலத் முதலி அப் பேட்டியில் தெரிவித்தார். (அ-ஐ-எ)

## வவுனியாவில் ரோந்து

யாழ்ப்பாணம், ஜன. 17

வவுனியாவில் நேற்று முழுவதும் சனநடமாட்டம் நிறைந்தபகுதிகளில் தலையாட்டிகளுடன் சிப்பாய்கள் ரோந்து சென்றனர்.

ஜீப் ஒன்றிலும் நவீனரக கவசவாகனங்களிலும் ஐம்பதுக்கும் அதிகமான சிப்பாய்கள் இவ்வாறு ரோந்து சென்றனர்.

சனநெருக்கம் கூடிய பகுதிகளில் தலையாட்டிகளுடன் சென்ற ஜீப் நிறுத்தப்பட்டு சிலரை சிப்பாய்கள் கைதுசெய்து விசாரணை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

இதன் காரணமாக வவுனியா நகரில் நேற்றுக் காலையில் கூடிய மக்கள் அவசர அவசரமாக நகரைவிட்டுக் கலைந்து சென்றனர். (உ-10)

## சுவிஸ் அரசு மறுப்பு

பொன், ஜன. 17

40 தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்ய முடியாது என்று சுவிஸ் அரசு அறிவித்துவிட்டது.

நீதி அமைச்சர் திருமதி எலிஸபத் இத்தகவலை பேர்னில் வெளியிட்டார்

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று ஐ. நா. அகதிகள் ஆணைக்குழு சர்வதேச மன்னிப்புச்

(8-ம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் ஹெலி சூடு! இளைஞர் காயம்!!

யாழ்ப்பாணம், ஜன. 17

நாவற்குழியில் நேற்று ஹெலிக்கொப்டர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எஸ் புலவர் என்ற இளைஞர் காயமடைந்தார் அவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

நேற்று பிற்பகல் நான்கு மணி அளவில் நாவற்குழி இராணுவ முகாமுக்குவந்த ஹெலிக்கொப்டர் தரையில் இருந்து எழுந்து செல்கையில் அரியாலைப்பகுதியை நோக்கிப் பத்து நிமிடங்களாக திடீர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது. (உ-10)

## இலங்கைத் தமிழருக்கு எதிராகப் பொருளாதாரத் தடையா?

# தமிழகம் பொங்கி எழுகிறது!

### ஆர்ப்பாட்டப் பேரணிகள்; கண்டனக் கூட்டங்கள்

சென்னை, ஜன. 17

யாழ் குடாநாடு மீது விதிக்கப்பட்ட பொருளாதார முற்றுகையை எதிர்த்தும்—

இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற இந்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியும்—

தமிழ்நாட்டில் ஏழு தினங்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் கண்டனப் பொதுக் கூட்டங்களும் நடத்தப்படவுள்ளன.

மாநில ஆளும் கட்சியான அ. தி. மு.க.,மத்திய ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸ் ஆகியவற்றைத் தவிர தமிழ் நாட்டில் உள்ள ஏனைய கட்சிகள் அனைத்தும் கூட்டிய மாநாடு ஒன்றில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

தி. மு. க., திராவிடர் கழகம், காமராஜ் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் அறிஞர் கழகம் ஆகியன இம்மாநாட்டில் கலந்து கொண்டன.

கண்டனக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் நாளை ஞாயிறு ஆரம்பமாகி எதிர்வரும் சனிக்கிழமை வரை தொடர்ந்து தமிழகம் எங்கும் நடத்தப் படும். (உ-ஐ-எ)

## கப்பல், கப்பலாக வந்த பொருள்கள்

காங்கேசன்துறை, ஜன. 17

கடந்த வியாழன் காங்கேசன்துறை துறைமுகத்தில் 3 கப்பல்களில் இருந்து பெட்டி பெட்டியாக பொருள்கள் இறக்கப்பட்டன.

சாக்குகள், முள்ளுக் கம்பிகள், காஸ் சிலிண்டர்கள் மற்றும் அடைக்கப்பட்ட பல பெட்டிகளில் பொருள்கள் ஏராளமாக இறக்கப்பட்டன.

பலாலியில் இருந்து சிப்பாய்கள் சுமார் 50 வாகனங்களில் வந்து பொருள்களை எடுத்துச் சென்றனர்.

அச்சமயம் ஹெலிக்கொப்டர் ஒன்று ஆகாயப் பாதுகாப்பு வழங்கியது.

வழமையில் ஒருமுறை ஒரு கப்பலில்தான் 'பொருள்கள்' வந்திறங்கும். இம்முறை 3 கப்பல்களில் பொருட்கள் வந்திறங்கின என்பது அசாதாரணமான சம்பவமாக கருதப்படுகிறது. (உ-எ-21)

## சுபநேரம்

17—01—1987
சனிக்கிழமை

சுபநேரம்:
3. 35 முதல் 5 05 வரை
ராகுகாலம்:
9 .35 முதல் 11.05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## கொலன்னாவை குண்டு முயற்சி:

## மட்டக்களப்பில் நேற்று இருவர் கைது

மட்டக்களப்பு, ஜன. 17

கொலன்னாவை குண்டு வெடிப்புமுயற்சிசம்பவம் தொடர்பாக மட்டக்களப்பில் நேற்று நண்பகல்இரண்டுபேர் கைது செய்யப்பட்டனர்,

அபாடெபிலர்ஸ் உரிமையாளரான ரங்கசாமியும் அவரின் உதவியாளரான குணரத்தினம் என்பவருமே ஆயுதபடையினரால் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

ரங்கசாமி, மாத்தளையைச் சேர்ந்தவர். அகதியாக மட்டக்களப்புவந்து தையல் தொழிலில் ஈடுபட்டு வந்தார்.

இவரின் தையல் நிலையத்தில் வேலை செய்து வந்த யுவதி ஒருத்தியும் கைதுசெய்யப்பட்டு விசாரணையின்பின்னர் விடுவிக்கப்பட்டார்.

## திங்களன்று பேரணி! மினிபஸ்களும் ஓடாது

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். குடாநாட்டுக்கான எரிபொருள் தடையைக் கண்டித்து நாளை மறுதினம் திங்கட்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

வடபிராந்திய மினி பஸ் போக்குவரத்துச்சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

அன்றையதினம் வாகனங்களில் எதுவும் சேவையில் ஈடுபடுத்தப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

**Samuel, Sons & Company**
Limited

IMPORTANT NOTICE
TO OUR CUSTOMERS

We wish to remind our customers once again that for your convenience we have opened an additional Sales Centre at our Workshop at No. 17, Chemmany Road, Nallur

LOCATION:

Fifty yards from Muthiraisanthi aud opposite to Kachcheri-Nallur Road and Chemmany Road Junction.

N.B.

Our Sales Centre at Hospital Road, Jaffna will continue to function as in the past.

Telephone No. - 206,208, Hospital Road. Jaffna - 22462

Telephone No. - No.17, Chemmany Road, Nallur - 22199



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

## தேவை

அச்சகம் ஒன்று செயற்படுவதற்கு யாழ். பெருமாள் கோவிலடி, மனோஹரா தியேட்டர் சந்தி, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ் இந்துக்கல்லூரி ஆகியவற்றை அண்டிய பகுதிகளில் ஏதேனும் ஓர் இடத்தில் வசதியான வீடு தேவை. உடன் தொடர்பு கொள்க:- விளம்பர இல: 50, மே/பா. உதயன், தபால்பெட்டி இல. 23, யாழ்ப்பாணம்.

அனுபவம் வாய்ந்த தொலைபேசி இயக்குநர் (இரவில் கடமையாற்றுவதற்கு) உடன் தேவை அனுபவ விபரங்களுடன் முழுமையான விண்ணப்பத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர். விளம்பர எண்: 49, மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு ஓவியர் தேவை. ஆற்றல், அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விளம்பர எண்: 47, மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

## வகுப்புகள்

ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக், மணிக்கூடு றிப்பியறிங் செய்முறையுடன் கற்பிக்கப்படும். ஆரம்பம் 17-1-1987 விபரங்கட்கு எலக்ரோ டெக்னிக்கல் இன்ஸ்ரிரியூசன் கல்வளை, சண்டிலிப்பாய்.

108, Brown Road, Jaffna A/L 89, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 20-1-87 செவ்வாய் 6 30 A M

## சேவை

**ரேனியோ - ரைப்பிங்**

தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகள், ரேனியோ பிரதிகள், தமிழ்-ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கு யாழ் நகரில் முதன்மை பெறும் நிறுவனம்;

'இளின்கட்' இல: 239-மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல: 2282 3

---

ராஜீவை சந்திக்காமல்

# காமினி 'கப்சிப்' என்று வந்ததின் அர்த்தம் என்ன?

## வெங்கடேஷ் கூற்று நந்தியா?

கட்டம், கட்டமாக நடந்து வந்த இனப்பிரச்சினைப் பேச்சுக்களின் அடுத்த கட்டம் என்ன என்பது இன்று தெரியவில்லை.

இறுதியில் பிரதமர் ராஜீவைச் சந்திக்கச் சென்ற அமைச்சர் காமினி சந்திக்காமலே 'கப்சிப்' என்று திரும்பி விட்டார்.

வியாழன் மாலை கொழும்பு திரும்பிய அமைச்சர் காமினி, ஜனாதிபதியைச் சந்திக்காமலே அனுராதபுரம் பயணமானார் என்று இன்னும் ஒரு செய்தி

ஜனாதிபதியின் விசேட தூதராகச் சென்ற அமைச்சர் காமினி நிச்சயம்பிரதமர் ராஜீவைச் சந்திப்பார் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்களே முன்னர் தெரிவித்திருந்தன.

### சந்திப்பு ஏன் இல்லை

இளை அமைச்சர்கள் நட்வர்சிங், சிதம்பரம், வெளியுறவு அமைச்சர் திவாரி ஆகியோரைச் சந்தித்த அமைச்சர் காமினிக்கு பிரதமரை சந்திக்கும் வாய்ப்பு ஏன் கிடைக்கவில்லை?

இதுதான் ராஜதந்திர வட்டாரங்களில் கேட்கப்படும் கேள்வி

அமெரிக்காவின் கூலிப் பட்டாளம் பற்றி இந்தியா தெரிவித்த கவலைக்கு இலங்கை தெரிவித்த கண்டனம் தான் பிரதமரைச் சந்திப்பதற்கு அமைச்சருக்கு 'நந்தி' ஆக இருந்ததோ!

என்ன இருந்தாலும் இந்திய- இலங்கை ராஜதந்திர உறவில் சிக்கலான நெருக்கடி ஒன்று உருவாகி விட்டது

### சத்வால் காலத்தில்

இந்தியத் தூதராக திரு. எஸ் ஜே. சத்வால் கொழும்பில் பணியாற்றிய போது இப்படி ஒரு நெருக்கடி ஏற்பட்டது

'தமிழ் நாட்டில் இருந்து போராளிகள் வந்த படகை ஓட்டி வந்தவர் இந்தியர். இதை ஆகாயக் கண்காணிப்பின்போது நாம் கண்டோம்'- என்ற சாரப்பட இலங்கை அரசு வானொலி தெரிவித்தது. அரசுப் பத்திரிகைகளும் செய்திகள் வெளியிட்டன.

இதுபற்றி திரு. சத்வால் கருத்து வெளியிட்டார்.

'படகு ஒன்றை ஓட்டி வருபவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை விமானத்தில் இருந்த வண்ணம் கண்டு பிடிக்கும் வல்லமை இலங்கைப் படைகளுக்குத் தான் உண்டு' என்று கூறினார் திரு. சத்வால்.

அவ்வளவு தான். கொழும்பு அரசு பத்திரிகைகள் திரு. சத்வாலை 'பித்தன'. த ஐலண்ட் பத்திரிகையில் திரு. சத்வாலுக்கு பகிரங்கக் கடிதம் ஒன்று பிரசுரமானது.

இப்படிக் கூறியது ராஜதந்திரிகளுக்கு ஏற்றதா?- என்று கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது.

### இப்போதைய சிக்கல்

அதுபோன்ற ஒரு நெருக்கடி இப்போது ஏற்பட்டுள்ளது

அமெரிக்காவின் இந்திய அரசு தெரிவித்த கவலையை இலங்கையோ திரு. வெங்கடேஸ்வரன் தெரிவித்த கவலையாக எடுத்து, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரை அழைத்து கண்டனத்தைத் தெரிவித்தது.

அது மட்டுமல்ல, இந்தியப் பிரதமரின் மத்தியஸ்த முயற்சிக்குத் திரு. வெங்கடேஸ்வரன் ஒத்துழைக்க வேண்டும் என்று இலங்கை பிரதி அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அது மட்டுமல்ல திரு. வெங்கடேஸ்வரன் தனது

### உள்ளும் புறமும்

குறுமுனி

கூற்றை வாபஸ் வாங்க வேண்டும் என்றும் இலங்கை கோரியது.

இலங்கையின் கோரிக்கைகளை அமைச்சர் முன்னிலையில் வைத்தே இந்தியத் தூதர் நிராகரித்து விட்டார்.

இந்திய வெளியுறவுச் செயலாளரின் கவலையாக எடுக்காது திரு. வெங்கடேஸ்வரன் என்ற தனி நபரின் கவலையாக இலங்கை எடுத்துக் கொண்டதன் விளைவு தான் இது

### விட்டுக்கொடுக்காத டிக்ஸிற்

அமெரிக்கக் கூலிப் படைகள் இலங்கையில் உள்ளது என்பதை தஸ்தாவேஜு மூலம் நிரூபிக்கவும் தயார் என்று திரு டிக்ஸிற் வேறு அடித்தக் கூறியும் விட்டார்.

கொழும்பில் நடந்த இச் சம்பவங்கள் அமைச்சர் காமினி திஸநாயகாவின் புதுடில்லி விஜயத்தின் நோக்கத்தையே நிறைவேற்ற முடியாது செய்துவிட்டனபோலும்,

அமைச்சர் காமினி மூலம் புதிய சிந்தனை எதுவும் அனுப்பப்படவில்லை என்பதை இளை அமைச்சர் மட்டத்தில் அறிந்து கொண்ட பின்னர், பிரதமரைச் சந்திக்க வேண்டியதில்லை என்று இலங்கை அமைச்சருக்கு உணர்த்தப் பட்டதுபோல் காரியம் முடிந்து விட்டது.

புதிய சிந்தனை இல்லாமல் சந்திப்புக்களைத் தொடருவதில் என்ன பயன்? இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி நினைத்து இருக்கக்கூடும் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

"தூது செல்பவர்களை மாற்றியும் பயனில்லை. நேரத்துக்கு ஒரு பேச்சு பேசுபவர்களை எப்படிவழிக்குக் கொண்டுவருவது?- இப்படி இந்திய ராஜதந்திரம் செயல்படுகின்ற நேரத்தில், இலங்கையின் 'குக்குள் சார்லி' ராஜதந்திரம் வேறு திசையில் செல்கிறது. ராஜதந்திர நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இனப்பிரச்சினைத் தீர்வின் அடுத்த கட்டம் பற்றி பிரதமர் ராஜீவின் வாயசைப்பை எதிர்பார்த்துகாத்துஇருக்கிறார்கள் அரசியல் அவதானிகள்!

---

## பிரபா வந்தாரா?

'தம்பி' வந்துவிட்டாராம்! உண்மையா?

இப்படி அடுத்தடுத்து டெலிபோன் கேள்விகள்.

ஏதோ வந்து போகாதவர் வந்துவிட்ட மாதிரி ஒரு பரபரப்பு,

பரபரப்பு யாழ்ப்பாணத்தில் அல்ல; கொழும்



பிரபாகரன்

பில்தான்.

கொழும்புப் பத்திரிகைகளோ 'தம்பி'யின் வருகையை முன்பக்கத் தலைப்புச் செய்தியாக அடுத்தடுத்துப் பிரசுரித்தன.

யார் இந்தத் 'தம்பி'? தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் - தளபதி திரு. பிரபாகரன் தான் அவர்.

'தம்பி' அவரின் செல்லப் பெயர். இன்று உலகப் புகழ்பெற்ற போராளித் தலைவர் ஒருவரின் பெயராகவும் மாறிவிட்டது.

'கடைசியாக திங்கள் சென்னை வீட்டில் காணப்பட்டார்' - இப்படி ஒரு பத்திரிகை பிரசுரித்தது. அவ்வளவுதான்.

கொழும்புப் பத்திரிகைகள் எங்கே என்று காத்து இருந்தன.

இந்தியாவின் 'இந்து' பத்திரிகையில் பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி எழுதி விட்டார். - "யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையே உள்ள பாதுகாப்பான இடத்தில் வந்திறங்கினார்"— என்று.

ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை எழுதியது; "அதிவிரைவுப் படகு ஒன்றில் தெரிந்தெடுக்கப்பட்ட போராளிகளுடன் யாழ்ப்பாணம் சென்றார்"— என்று.

"இலங்கை அரசின் இராணுவ மிரட்டலைஎதிர் கொள்ளும் போராட்டத்தைப் பொறுப்பேற்கவே பிரபாகரன் யாழ் சென்று இருக்கிறார்"-இது 'இந்து'

(8-ம்பக்கம் பார்க்க)

---

# அரசாங்க அலுவலகங்களில்....

சிகதி

## ஆசிரியர்களுக்கு நல்ல காலம் பிறந்தது

வழமையாக மாத ஆரம்பத்திலேயே அனுப்பப்படுகின்ற அரச ஓய்வூதியர்களுக்கான 'வவுச்சர்' இதுவரையும் ஒரு சில பேருக்குக் கிடைக்கவில்லை என்று தெரிகிறது எரிபொருள் தடைபோல் அரசு இதனையும் தடைசெய்துவிட்டதோ என பல ஓய்வூதியர்கள் அங்கலாய்க்கின்றனர்.

● ● ●

இந்த அரச பதவிக்கு வந்ததும் ஒரு கால எல்லை குறிப்பிட்டு சில பதில் அதிபர்களை நிரந்தர அதிபர்களாக்கியது. இதில் பல குறைபாடுகள் இருந்தன. சில ஆசிரியர்கள் இதனால் பாதிப்புற்றிருந்தனர். இதனை அரசு தற்பொழுதுநிவர்த்திசெய்து வருவதாக செய்தி வெளிவந்துள்ளதை யாவரும் வரவேற்பர். ஆனால் இதன் பின்னரும் ஆசிரியர்கள் மத்தியில் மனத்தாங்கல் இல்லாதிருத்தல் வேண்டும். பொதுவாக பல ஆண்டுகளாக பதில் அதிபர்களாக கடமையாற்றும் நிலை மாற வேண்டும். திணைக்களத்தினர் கொடுக்கும் பல வேறு காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல.

● ● ●

சில திணைக்களங்களில் சில உயர் அதிகாரிகள் கடமைகளை தாங்களும் செய்வதில்லை, தமக்கு கீழ் உள்ளவர்கள் செய்யவும் அனுமதிப்பதில்லை. தமது கீழ் அதிகாரிகள் செய்யும் வேலைகளை மதிப்பதும் இல்லை. இதனால் பொதுவேலைகளே பாதிக்கப்படுகின்றன என்பதை இவர்கள் ஏன் உணருவதில்லை என்பது புரியாது உள்ளது. மனச்சாட்சி மறைந்து விடுகிறதுபோல் தெரிகிறது.

● ● ●

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சம்பள விடயம் இதுவரை நிறைவு பெறாதிருப்பது வருந்தத்தக்கதாகும். இதனை காலங்கடத்துவதால் எதிர் காலத்தில் பல பிரச்சினைகள் தோன்றக் கூடும். அரசு உடன் இதில் அக்கறை காட்ட வேண்டும். உயர் கல்வி பாதிப்படைவதை நாம் தவிர்க்க முடியாதா?

● ● ●

கடமையில் ஈடுபடும் அரச பணியாளர்களுக்கு புதுவருடச் செய்தியாக நீதிபதி ஒருவர் பின்வரும் கருத்துக்களை தெரிவித்திருந்தார்:-

எமதுநீதிமன்றத்திற்கு வருபவர்கள் அனேவரும் மிகவும் குறைந்த வருமானம் உள்ளவர்களாவர். அவர்களுக்கு வேண்டியனவற்றை பொறுப்புடன் செய்வதுடன் லஞ்சம் முதலியன பெறுவதற்கு எவரும் உடந்தையாக இருக்கக்கூடாது. அத்துடன்பணியாளர்கள் கடமையின் போது மது போதையிலும் இருக்கக் கூடாது என்பதாகும்.

சமூகத்தில்உள்ள இந்த இரு குறைபாடுகளும் தான் ஒரு மனிதனை கீழ் நிலைக்குக் கொண்டு செல்கின்றன. இதனை நீதிபதி சரியாகச் சுட்டிக் காட்டியுள்ளார். அரச பதவியில் உள்ள சிலர் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அரசியல் வாதிகள் போல் பேசுவார்கள். ஆனால் அவர்களைப்போன்றவர்கள் பேச்சில் வல்லவர்கள் ஆனால் செயலில் பூச்சியம் என்பது இப்போது பொதுமக்களுக்கும் நன்றாகத் தெரியும்.

● ● ●

அண்மையில் முஸ்லிம் சமூகத்தை புண்படுத்தக் கூடிய விதத்தில் அமைந்த படம், பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. வேறு ஒரு பக்கத்தில் அச்சிடவேண்டியதை மாற்றி இன்னொரு பக்கத்தில் புகுத்தியதன் காரணத்தால்தான் இப்பிழை நடந்துள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இதனை அச்சிடுவதற்கு அக்குழுவிற்கு பொறுப்பானவர்கள் அத்தனைபேரும் கையொப்பமிட்டு கொடுத்தார்களாம். இனி நடப்பது? யாராவது ஒருவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுவார். பின்னர் விசாரணை நடக்கும் அல்லது இவைகள் இரண்டும் இல்லாமலும் போகலாம்.

---

# ஆப்கன்.யுத்த நிறுத்த அறிவிப்பு

## உருப்படியான பலன் அளிக்குமா?

கடந்த ஏழுவருட கால ஆப்கானிஸ்தான் பிரச்சினையில் எதிர்பாராத விதமாக புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தான் தலைவர் நஜிவுல்லா ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் 15 ஆம் திகதி தொடக்கம் யுத்த நிறுத்தம் ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படுகிறது.

6 மாத காலத்துக்கு யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும்.

நாட்டில் இணக்கசபை ஒன்றை ஏற்படுத்தவும் வெளி நாடுகளில் உள்ள ஆப்கானிஸ்தான் அரச எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரத் தலைவர்களுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்கவும் ஆப்கானிஸ்தான் தலைவர் நஜிவுல்லா ஆலோசனை கூறி உள்ளார்.

### 1979 இல்

1979 ஆம் ஆண்டு சோவியத் படைகளின் உதவியுடன் ஆப்கானிஸ்தானில் சோவியத் சார்பு அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ளமிகப்பெரிய திருப்பமாக அரசியல் அவதானிகள் இதனைக் கருதுகிறார்கள்.

1979 ஆம் ஆண்டு தொடக்கம் ஆப்கானிஸ்தானில் 80 ஆயிரம் முதல் ஒருலட்சம் சோவியத் துருப்புக்கள் வரை நிலைகொண்டுள்ளன.

சோவியத்துருப்புக்களுக்கு எதிராகவும் ஆப்கன் அரச படைகளுக்கு எதிராகவும் முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் கெரில்லா யுத்தம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

முஸ்லிம் கிளர்ச்சியாளர்களின் பிரதான கெரில்லா முகாம்கள் ஆப்கானிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் பிரதேசத்துக்குள் அமைந்துள்ளன.

கிளர்ச்சியாளர்களுக்கு பாகிஸ்தான் பெரும் அளவு உதவி செய்து வருகின்றது.

ஆப்கானிஸ்தானில் உள்ள சோவியத் துருப்புக்களைச் சாட்டாகவைத்து அமெரிக்கா பாகிஸ்தானுக்கு பெரும் அளவு நவீன ஆயுதங்களை விநியோகித்து வருகின்றது.

பாகிஸ்தானுக்கு விநியோகிக்கப்படும் ஆயுதங்கள் நிச்சயமாக தனக்கெதிராகப் பயன்படுத்தப்படும் என்று இந்தியா அடிக்கடி அபயக்குரல் எழுப்பி வந்தது.

இதனால் ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் எல்லையில் மட்டும் அன்றி இந்திய-பாகிஸ்தான் எல்லையிலும் நெருக்கடி நிலைமை உருவாகி இருந்தது.

சோவியத் - அமெரிக்க உறவு அபிவிருத்தி அடைவதற்கும் ஆப்கானிஸ்தான் பிரச்சினையே பிரதான முட்டுக்கட்டையாக விளங்கி வருகின்றது.

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் துருப்புக்கள் வாபஸ் பெறப்படும்வரை "சோல்ட் 2" என்று அழைக்கப்படும் ஆயுத குறைப்பு ஒப்பந்தத்தை அங்கீகரிக்க அமெரிக்கா மறுத்து வருகிறது.

ஆப்கானிஸ்தான் விவகாரம் இப்படி சர்வதேச நெருக்கடி ஒன்றைத் தோற்றுவித்து வந்த சமயமே ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் பற்றி நஜிவுல்லா அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

### சாதகமான பதில் இல்லை

அரசின் யுத்த நிறுத்த அறிவிப்புத் தொடர்பாகவோ அல்லது கூட்டரசாங்க யோசனை பற்றியோ முஸ்லிம் கிளர்ச்சியாளர்களிடமிருந்து இதுவரை சாதகமான பதில் எதுவும் வரவில்லை.

முஸ்லிம் கிளர்ச்சித் தலைவர்கள் பலருக்கு அவர்கள் இல்லாமலேயே ஆப்கானிஸ்தான் நீதிமன்றங்கள் மரணதண்டனை விதித்துள்ளன.

இப்படியான நிலையில் [illegible] திரும்பி ஆட்சியாளர்களுடன் சேர்ந்து கூட்டரசை அமைக்கும் சாத்தியம் குறித்து முஸ்லிம் கிளர்ச்சித் தலைவர்கள் சந்தேகம் தெரிவித்து வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுடன் சேர்ந்து கூட்டரசு உருவாகுமானால் சோவியத் துருப்புக்கள் படிப்படியாக வாபஸ் பெறுவதற்கு அது முதல் படியாக அமையும்;

தனது துருப்புக்களை படிப்படியாக வாபஸ் பெறப்போவதாக சோவியத் யூனியன் ஏற்கனவே அறிவித்திருந்தது.

அதற்கு ஏற்ற சாதகமான நிலைமையைத் தோற்றுவிக்க முன்னாள் அதிபர் கர்மாலுக்கு சோவியத் யூனியன் காலக்கெடுவும் விதித்திருந்தது:

ஆனால் அதிதீவிர போக்குள்ள கர்மால் சுமுகமான நிலைமை ஒன்றைத் தோற்றுவிக்கத் தவறி இருந்தார்;

இதனையடுத்தே கர்மாலின் பதவி நீக்கமும் நஜிவுல்லாவின் நியமனமும் ஆப்கானிஸ்தானில் இடம் பெற்றன.

அடுத்த மாதம் ஜெனிவாவில் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் மீண்டும் ஐ நா. தலைமையில் உத்தியோகப் பற்றற்ற பேச்சுக்கள் ஆரம்பமாகின்றன.

யுத்தநிறுத்தக் கோரிக்கைக்கு முஸ்லிம் கிளர்ச்சியாளர்களும் இணங்குவார்களானால் அடுத்த ஜெனிவாப் பேச்சுக்களில் முக்கிய திருப்பம் ஏற்படும். ★

### உலக உலா

ஏன்.பி.சீலன்

---


# பிரயாண ஒழுங்குகள்

● நோர்வே ● லண்டன்
● ஜேர்மனி ● சிங்கப்பூர்
● அவுஸ்திரேலியா
● சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கான உங்கள் பிரயாண ஒழுங்குகளை உடனுக்குடன் செய்துகொள்ள உடனடியாக எமது அலுவலகத்தில் சந்தித்து பதிவுசெய்து கொள்ளவும்.

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

TRI STAR TRAVELS

றை ஸ்ரார் றவல்ஸ்

இல 6,நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம்.

மு.கு. யாழ்நகர் நிலைமை சீரற்று எமது அலுவலகம் மூடப்பட்டிருந்தால் உங்கள் நலன்கருதி ஏற்பாடு செய்யப்பட்ட கீழ்வரும் முகவரிகளில் தொடர்புகொள்ளவும்.

1. 71, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. வ. குகராசா, மயிலியற்புலம், கந்தசாமி கோயிலடி, அராலி வடக்கு.
3. ந. தயாளன், மயிலணி வடக்கு, சுன்னாகம்.


## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது. (இது இலங்கை வங்கியின் 16 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்.)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 42. 87 |
| அமெ. டாலர் | 28. 40 |
| இந்திய ரூபா | 2. 16 |
| மார்க் ஜேர்மனி | 15. 43 |
| கனடா டாலர் | 20. 57 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 61 |
| பிராங் (சுவிஸ்) | 18. 25 |
| அவுஸ். டாலர் | 18. 14 |

## அந்தியேட்டி அழைப்பு

**திருமதி சுப்பிரமணியம் பாக்கியம்**

எதிர்வரும் ஞாயிறு (18-1-87) அன்று அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
மணி.

குரும்பசிட்டி ரோட்,
கட்டுவன்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அவசரசேவைகள் கூட ஸ்தம்பிதமடையும் நிலை!

# யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்வுக்கு வேட்டு!!

நெருப்பைக் கண்டதும் பற்றி எரியும், எரிபொருளின் விலையைக் கேட்டதும் வயிறு பற்றி எரிகிறது.

17 ரூபா விற்ற ஒரு லீற்றர் பெற்றோல்—
நேற்று 50 ரூபா!
இன்று 100 ரூபா!
நாளை ?...?...

அரசு இனியும் இறங்காதோ? எரிபொருள் வந்து இறங்காதோ?!

இதுதான் இன்று வடபகுதி மக்கள் மனதில் எரிபொருள் பற்றி எதிரொலிக்கும் கேள்விகள்.

இப்படி தமிழ் மக்களை கேள்விகளுக்குள்ளாக்கி, அவர்களின் வாழ்க்கையை வேள்வி செய்யும் அரசின் எரிபொருள் விநியோக நிறுத்தம் பற்றி மக்களின் மனக்கோலங்களை அறிய முற்பட்டது சஞ்சீவி.

## மக்களின் மனக்கோலம்

### அரச அதிகாரி கருத்து

அரச திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தமது கருத்தைத் தெரிவிக்கையில்—

இன்று வடபகுதியில் மரணம் ஒன்றுதான் மலிவாகக் கிடைக்கிறது.

ஆனால் மரணமானவரின் உடலை எரிக்கக்கூட விறகு மண்ணெண்ணெய் பெற்றால் கிடைப்பதில்லை.

பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவு நிதியிலிருந்து செய்யப்படும் சகல அபிவிருத்தி வேலைகளுக்கும் எரிபொருள் அவசியம். கட்டட வேலைகள், வீதிகள் திருத்தும் வேலைகள் என்பன ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மேலும் பஸ் கட்டண உயர்வு, போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றால் ஊழியர்களின் வரவும் பெருமளவு குறைந்துள்ளது என்றார்.

வழக்கமாக வாகனத்தில் வலம்வரும் ஒரு வடமராட்சி ஆசிரியர் தமது கருத்தைக் கூறுகையில்—

அரசு தமிழ் மக்களை கால்நடைகளாக மதிப்பதால் காரில் சென்றவர்கள் கால்நடையாகச் செல்ல வேண்டியுள்ளது.

### கழுத்துக்குக் கயிறு

இவ்வளவு காலமும் தமிழ் மக்களுக்குப் பல தடைகளின் மூலம் கைகளில், கால்களில் கயிறு போட்ட அரசு, எரிபொருள் தடையால் கழுத்துக்கே கயிறு போட்டுள்ளது.

கல்வித்திணைக்களம் கூட இலவச பாடப்புத்தகங்களை விநியோகிப்பதற்கு மாட்டு வண்டில்களை பாவிக்க வேண்டியுள்ளது.

பஸ் கட்டண உயர்வால் பல ஆசிரியர்கள் 30 ரூபா பஸ்ஸிற்கு செலவழித்து பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

அப்படிச் செல்லும் போதும் ஒருமணி நேர பஸ் பயணத்தில் ஒரு நாள் பஸ்பயண அலுப்பு ஏற்படுகின்றது எப்படி சீராகக் கடமையைச் செய்ய முடியும்?

பலபள்ளிச் சிறார்கள் பஸ் கட்டண உயர்வால் பாடசாலைகளுக்கு வராது நின்று விடுகிறார்கள். இது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

இவ்வாறு ஆதங்கம் தெரிவித்தார் அந்த ஆசிரியர்.

### மாணவருக்குச் சலுகை

ஒரு மினிபஸ் உரிமையாளரிடம் இதுபற்றி வினவியபோது—

பள்ளி மாணவர்களிடம் கட்டண உயர்வை விட்டு கடும்பிடியாக நிற்க வேண்டாம் என்றும், மாணவர்கள் தரும் சில்லறையை மறுக்காமல் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் பஸ் உரிமையாளர்களுக்கு தங்கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளதாயும் கூறினார்.

இன்று 30 மினிபஸ்கள் ஓடிய ஒரு வீதியில் 10 பஸ்களே ஓடுகின்றன.

12 ரூபாவுக்கு வாங்கிய டீசல் இன்று 50 ரூபாவுக்கு வாங்க வேண்டியுள்ளது.

இதனாலேயே கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

கட்டணம் உயர்த்தியும் எமக்கு சில நாட்களில் நஷ்டமே ஏற்படுகிறது.

இக்காரணத்தாலும் அதிக பிரயாணிகளை ஏற்ற வேண்டிய கட்டாயத்தாலும் பல பஸ் உரிமையாளர்கள் தமது பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதில்லை.

வேறுபல பஸ் உரிமையாளர்கள் எரிபொருள் தட்டுப்பாடில்லாத முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தமது பஸ்களை சேவைக்கு அனுப்பியுள்ளனர்-இப்படிஅவர் தெரிவித்தார்.

### பெண்களுக்கும் நெருக்கடி

தனியார் வேலைத் தளம் ஒன்றில் வேலை செய்யும் இளம் பெண் ஒருவர் தமது கருத்தைக் கூறுகையில்—

பெண்களுக்கு வட பகுதியில் ஊதியம் ஆண்களைவிட குறைவாகவே வழங்கப்படுகிறது அவர்களின் சம்பளம் இன்றைய பஸ் செலவுக்கே சரியாகி விடுகின்றது.

ஆண்கள் மினிபஸ் கூரையில் ஏறி 'கூலாக' பயணம் செய்யலாம்.

பெண்கள் கூனிக்குறுகி வியர்வை வெட்கையுடன், புழுப்போல் புழுங்க வேண்டியுள்ளது.

பிரதான இ.போ.ச. பஸ் நிலையங்களில் பயணிகள் வரிசையாக வந்து பஸ்களில் ஏற வசதியுண்டு

ஆனால் மினி பஸ் தரிப்பு நிலையங்களில் அவ்வாறான வசதிகள் இல்லை.

இதனால் ஆண்கள் முண்டியடித்து முதலில் ஏறி விடுகிறார்கள். பெண்கள் பஸ் நெருக்கத்தில் நின்று பயணம் செய்ய வேண்டியுள்ளது.

வேலைக்கு கட்டாயம் போக வேண்டும் என்பதால் பெண்கள் இஷ்டப்பட்டே கஷ்டப்பட வேண்டியுள்ளது என்றார் அப்பெண்மணி.

### மீனவர் பாதிப்பு

கடற் தொழிலாளி ஒருவர் எரிபொருள் தட்டுப்பாடு பற்றி பிரஸ்தாபிக்கையில் —

கடல் வலயச் சட்டத்தால் பெருமளவு மீனவர்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் பிடித்த மீன்களைவிட, இராணுவத்தினர் பிடித்த மீனவர்கள் அதிகம்.

இந்நிலையில் மாதமொருமுறையாவது கடல் சென்று தொழில் புரிந்து, ஒரு நேர உணவாவது உண்டு வந்த மீனவர்கள் இன்று முழு நேர பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டு விலையேற்றத்தால் சகல பொருள்களும் விலையேறியுள்ளன. கீரைக்காரி கூட விலை ஏற்றிவிட்டாள்... எனவே மீனவர்களும் தமது மீனின் விலையை 5 மடங்காக உயர்த்த வேண்டியுள்ளது என்றார் அவர்.

### விவசாயிகள் கஷ்டம்

செம்மண்பிரதேச விவசாயி ஒருவர் தமது கருத்தை தெரிவிக்கையில் –

வட பகுதி விவசாயிகள் தமது விளைபொருள்களை கொழும்புச் சந்தைக்கு அனுப்பி விற்க முடியாத நிலையில் ஏற்கனவே நஷ்டமடைந்துள்ளனர்.

இந் நிலையில் எரிபொருள் கட்டுப்பாடு விவசாயிகளையே அதிகம் பாதிக்கின்றது.

தமது பயிருக்கு மண்ணெண்ணெய், டீசல் இயந்திரங்கள் மூலம் நீர் பாய்ச்சி வந்த வடபகுதி விவசாயிகள் இன்று பயிரோடு சேர்ந்து தாமும் வாட வேண்டிய நிலைக்கு- நிர்க்கதிக்கு- உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

அரசு எரி பொருளை அனுப்பாது மற்ற அனைத்தையும் வட பகுதிக்கு அனுப்புவது; வேரை வெட்டிவிட்டு தண்டுக்கு தண்ணீர் வார்ப்பது போன்றதே என்று தமது (6 ஆம் பக்கம் பார்க்க)

**எஸ். ஜே. பி. ரட்ணதுரை**




# இந்தியக் குழு இங்கு வரவேண்டும்

கடந்த நான்கு வருடங்களாக ஈழத்துத் தமிழர்கள் அனுபவித்து வரும் துன்ப, துயரங்கள் சொல்லி ஆறமுடியாதவை.

நித்தமும் வீடுடைப்புக்கள்- நித்தமும்காரண காரியமின்றி படுகொலைகள்- அப்பாவிகள் எந்த வித குற்றமும் செய்யாத நிலையில் தடுப்பு முகாம்களுக்குள் சிறை வைப்பு, சித்திரவதை- ஒருநாள் இருநாளல்ல, வருடக்கணக்கில்

இந்த நிலை ஓய்ந்த பாடில்லை; ஒழிந்த பாடில்லை.

ஏதோ ஒரு பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்போது மக்கள் மத்தியில் வெகுவாகக் குறைந்து ஏக்கப் பெருமூச்சே அதிகரித்து வருகிறது.

அரசாங்கத்தின் குரல்கள் நிமிடத்துக்கு ஒன்றாக இருக்கின்றது.

ஒன்றுமறியாத தமிழர்கள் நித்தமும் செத்துக் கொண்டிருக்கின்றார்கள்!

இதையெல்லாம் மறைத்து அரசாங்க தகவல் ஸ்தாபனங்களும் கொழும்பு ஆங்கில சிங்களப் பத்திரிகைகளும் லங்கா புவத்தும் (இப்போது புதிதாக) திரு அனுரா பண்டாரநாயக்காவும் ஏன் தான் தமிழர்களை விட்டுவைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? என்ற தொனியில் உரைக்கிறார்கள்.

எங்கே போவது? எப்படி உயிர் தப்புவது? இது தான் இப்போது வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் முக்கியமான கேள்வியாக இன்று எழுந்துள்ளது.

இந்தப் பயங்கர சூழ்நிலையில்தான் "புதிய யோசனைகள்" என்ற ஒரு 'புலுடா'

இந்தியாவைத் திசை திருப்பும் முயற்சிகள் தான் இவை என்பதே பலரது கருத்து.

சணம்பித்தம், சணம் வாதம் என்பார்கள்.

ஒரு நாளைக்குப் பேச்சு வார்த்தை; மறுநாளைக்கு வீடுடைப்பும் அப்பாவிகள் மீது குண்டுகள் பொழிவும் தான் இங்கு உண்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் கதை.

இராணுவ தளவிஸ்தரிப்புக்கள் ஒரு புறம்

இலங்கைத் தமிழர் பிரச்சினையை பாரதம் உண்மையாகத் தீர்க்க விரும்பினால் இங்கு இனி மேல் வரும் பாரத உயர் மட்டக் குழுக்கள் ஒரு முறையாவது வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு நேரில் வந்து நிலைமையை உண்மை நிலையைத் தெளிவாகக் கண்டு கொள்ளவேண்டும்.

வீடற்று வாசலற்ற எத்தனை அனாதைகள். கை கால்கள் இழந்தவர்கள். ஆஸ்பத்திரிகளில் எத்தனைபேர்? இவற்றைப் பற்றிய பூரண மதிப்பீடொன்று செய்ய வேண்டும்.

கொழும்பின் குரலை மட்டுமல்ல, பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியவர்களின் பிரதேசமான வடக்கு, கிழக்கின் உண்மைக்குரலை அவர்கள் விவரமாகக் கண்டு கொள்ள வேண்டும்.

அப்போது தான் இங்கு என்ன நடக்கின்றது என்பதை அவர்கள் விபரமாகக் கண்டு அறிந்து அதற்கான நிரந்தரத் தீர்வு காணமுற்படலாம் காண முடியும்

இந்தியா "எச்சரிக்கை" என்றதும் இங்கு வானத்தில் உறுமல் சத்தங்கள் குறைவதும் பின் அவர்கள் ஓயும் போது பழையபடி அப்பாவிப் பொதுமக்கள் மீது கண்மண் தெரியாமல் குண்டுகளைப் பொழிவதும் இங்கு சர்வசாதாரண விஷயமாகி விட்டது.

இவற்றைத் தடுத்து இங்குள்ள தமிழ்மக்களை உண்மையாகக் காப்பாற்றும் நோக்கம் பாரதத்துக்கு இருக்குமானால் அடுத்த முறை இங்கு வரும் பாரத உயர்மட்டக்குழு நிச்சயமாக பெரும் அழிவுக்குள்ளாகியுள்ள வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு நேரில் வருகைதர வேண்டும்.

உலக நாடுகளுக்கு இங்குள்ள உண்மை நிலையைத் தெளிவாக எடுத்துக் கூறவும் இது வாய்ப்பளிப்பதாக இருக்கும்.

**க. கணேசலிங்கம்**

## மகாத்மாவின் பெருமை

மகாத்மா காந்திக்கு உலகின் 45 நாடுகள் தபால் தலை வெளியிட்டு கௌரவித்துள்ளன.

வேறு எந்த உலகத்தலைவருக்கும் இப்படியான சிறப்புத் தரப்படவில்லை.

# லெபனான் பாணியில் இங்கும் மொஸாட்டின் தந்திரோபாயம்

சிறிய ஒரு தீவில் மிக ஐக்கியத்தோடு வாழ்ந்து வந்த இரு வேறு மொழி பேசும் மக்கள் நாடுசுதந்திரம் அடைந்த பின்னர் தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த அரசுகளின் இனவாதப் போக்கினால் இன்று பிரிந்து நிற்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

தமிழ் மொழி பேசும் சிறுபான்மை மக்கள் அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்டு வந்ததினால் தனியாகப் பிரிந்து தம்மைத் தாமே நிர்வகிப்பதாலன்றி தமக்கு சுதந்திரம் கிடையாது என்ற நிலைக்கு வந்துள்ளனர்.

தமிழ் மொழி பேசும் சிறுபான்மை மக்கள் என்னும் போது வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி, மலையக மக்களும், ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் இனவாத அரசின் அடக்குமுறைக்கு ஆளாக்கப் பட்டே வருகின்றனர்.

### ஈடுகொடுக்க முடியாத படை

வடக்கு, கிழக்கில் தமிழ்ப் போராளிகளின் தாக்குதல்களுக்கு அரச படைகள் ஈடுகொடுக்க முடியாத நிலையேற்பட்டு வருகிறது.

இனவாத அரசானது பல வழிகளிலும் இராணுவத்தைப் பலப்படுத்தி வருகின்ற போதிலும் வடபகுதியில் இராணுவம் முற்றாக முகாம்களில் முடங்கியேயுள்ளது

இராணுவ நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகள் பெறுவதற்கு சி.ஐ.ஏ, மொசாட், எஸ். ஏ எஸ் போன்ற உளவுப்படை

## துணைபோவது முஸ்லிம்களுக்கு பெரும் இழுக்கு

களின் உதவிகளை அரசு பெற்றுவருவதோடு மலேசியா, பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற நாடுகளின் கூலிப்படைகளையும் வருவித்து அபிவிருத்திக்கு செலவிட வேண்டிய பெருந்தொகைப் பணத்தை இராணுவ நடவடிக்கைகளுக்கு செலவிட்டு வருகின்றது அரசு. கூலிப்படைகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கு பிரதானமாக இஸ்ரேலிய உளவுத்தாபனமான 'மொசாட்டே' ஆலோசனைகள் வழங்கி வருகிறது

மொசாட்டின் வருகையின் பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளில் பல புதிய முறைகளை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

வடக்கைப் பொறுத்த வரை போராளிகள் பலம் பெற்றிருப்பதால் சிங்கள மொழி பேசும் உளவாளிகள் நடமாடமுடியாத நிலை நிலவுகிறது தமிழ் பேசுபவர்களே உளவாளிகளாகவும், எதிர்ப் போராட்டக்காரர்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றனர். மொசாட்டின் வருகையின் பின்னர் இவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதை நாம் அவதானிக்கக்கூடியதாயுள்ளது.

தமிழ் பேசும் இளைஞர்கள் பலரிடம் கைக்குண்டு, கண்ணிவெடிகள் போன்றவை இராணுவத்தினரால் விநியோகிக்கப்பட்டுள்ளது அவர்கள் கொடுத்த தகவல்களின் பெயரில் சில போராளிகளின் முகாம்கள் கூட தாக்கப்பட்டுள்ளது

இன்னும் பலர் கண்ணிவெடிகள் கைக்குண்டுகள் சகிதம் வடக்கில் நடமாடுவதாகத் தெரிய வந்துள்ளது. வடபகுதியில் இதைவிடப்பலமாக ஓர் எதிர் போராட்டப் படையை இராணுவத்தால் உருவாக்க முடியாது.

### மொசாட் தந்திரம்

ஆனால் கிழக்குப் பகுதியில் இராணுவ நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

அத்தோடு மொசாட்டின் பிரித்தாளும் தந்திரோபாயத்தைப் பிரயோகிக்கக் கூடிய வகையில் தமிழ் பேசும் மக்கள் இரு தனித்துவமுள்ள குழுக்களாக பிரிந்து காணப்படுகின்றனர். மேலும் சிங்கள மொழி பேசும் மக்களும் அங்கு காணப்படுகின்றனர்.

மொசாட்டினர் தமது நாட்டுடன் ஒப்பிடக் கூடிய இராணுவ தந்திரோபாயத்தையே கிழக்கில் கையாளுகின்றனர்.

### லெபனான் பாணி

இஸ்ரேலின் வட பகுதியான லெபனானின் தென்பகுதியை ஆக்கிரமித்து அங்கு கொலை வெறியாட்டம் ஆடிய இஸ்ரேலியர்கள் அப்பகுதியில் தொடர்ந்து நிலைகொள்வதற்காக நாளாந்தம் கோடிக்கணக்கான டொலர்களைச் செலவிட வேண்டி வந்தது.

இதனால் லெபனானிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் வாபஸ்பெற வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானது.

லெபனானில் வேறு பிரச்சினைகளை உண்டு பண்ணாமல் பின் வாங்கினால் தமது எல்லைப்புறங்களில் பாலஸ்தீனியர்களின் பலம் அதிகரித்து விடும் என்ற காரணத்தினால் திட்டமிட்டு செயற்பட்டது மொசாட்.

லெபனானின் தென்பகுதியில் செறிவாக வாழும் அரபு மொழி பேசும் கிறிஸ்தவர்களிடையே மதவெறியை வளர்த்து ஊர்காவல் படை என்ற அமைப்பை உருவாக்கி அவர்களுக்கு ஆயுதங்கள், கவசவாகனங்கள் போன்றவற்றை வழங்கியது மொசாட்,

அதுமட்டுமல்ல அரபு மொழி பேசும் லெபனான் முஸ்லிம்களுக்கு எதிராகவும் பாலஸ்தீனத்திலிருந்து விரட்டியடிக்கப் பட்டு தாயகத்திற்காகப் போராடும் முஸ்லிம்களுக்கெதிராகவும், கிறிஸ்தவர்களுக்கெதிராகவும் போராட்டங்களை நடத்தி பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் நோக்கத்தில் மொசாட் பின்னணியிலிருந்து செயற்படுகின்றது.

இதே போன்று லெபனானின் தென்பகுதியில் வாழும் கிறிஸ்தவ மக்களை மரோனிஸ்ட், பலாங்கிஸ்ட் என இரு குழுக்களாக்கி இருகுழுக்களுக்கிடையிலும் மோதல்களை உருவாக்கியுள்ளனர்.

மேலும் பாலஸ்தீனத்திற்காகப் போராடும் இயக்கங்களுக்கிடையே தனது வானொலியைப் பயன்படுத்தி மோதல்களையும் உருவாக்குகின்றனர். சில சிறிய குழுக்களுக்கு மொசாட் நேரடியாக ஆயுதங்களையும் வழங்குகின்றது

லெபனானின் தென் பகுதியில் பாலஸ்தீனியர்—சியா, ஷியா—சுன்னி சியா— அமல், அமல்—சுன்னி. அமல்— ட்ரூஸ், ட்ரூஸ்—செய்ட்டி என இனங்காணமுடியாத அளவுக்கு குழுக்களிடையே மோதல்கள் நடைபெறுவதற்கும், ஆயிரக்கணக்கான வீரர்கள் அநியாயமாகப் பலியாவதற்கும் இஸ்ரேலிய சியோனிச வாதிகளே காரணமாகும்.

இவர்களுக்கிடையே மோதல்களை வளர்ப்பதன்மூலம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்பி தமது எல்லைகளை இஸ்ரேலியர்கள் பலப்படுத்துகின்றனர்

அரபுமொழி பேசும் கிறிஸ்தவர்கள் வாழும் லெபனானின் தென்பிரதேசம் இஸ்ரேலின் வடக்கு எல்லைக்கு ஒரு பாதுகாப்பு அரணாகவும் அமைகின்றது.

### கிழக்கிலும் மன்னாரிலும்

இதை ஒத்த ஒரு நிகழ்வையே நாம் கிழக்கு மாகாணத்திலும் மன்னார் மாவட்டத்திலும் காண்கின்றோம்

சிங்களக் கிராமங்களை அண்டியுள்ள பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்களை விரட்டியடித்துவிட்டு அங்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவி அங்குள்ள மக்களுக்கு ஆயுதப் பயிற்சியும் வழங்கி எல்லைகளைப் பலப்படுத்தி வருகின்றது அரசு.

அத்தோடு கிழக்கில் வாழும் முஸ்லிம் இளைஞர்கள் சிலருக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி ஊர்காவல் படை என்ற பெயரில் தனது சொந்த நலன்களுக்காகஅவர்களை அரசு பயன்படுத்துகிறது.

### கண்டிக்க வேண்டிய விடயம்

இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு ஸ்ரீலங்காவில் ஆரம்பிக்கப்பட்டபோது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்த முஸ்லிம் மக்கள் பலர் பயங்கரமான முறையில் ஸ்ரீலங்கா அரசின் கூலிப்படைகளால் தெருக்களில் சுட்டுக் கொல்லப்பட்டதையும் மறந்து மொசாட்டினரின் வஞ்சகவலையில் முஸ்லிம் இளைஞர்கள் சிலர் வீழ்த்தப்பட்டிருப்பது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். முஸ்லிம் கிராமங்களில் உருவாக்கப் பட்டுள்ள ஊர்காவல் படையும், வேறு சில ஆயுதம் தாங்கிய சிறு குழுக்களும் முஸ்லிம் மக்களின் நலனுக்காகவோ அல்லது பாதுகாப்புக்காகவோ உருவாக்கப் படவில்லை என்பது அவர்களின் அண்மைக்கால நடவடிக்கைகளிலிருந்து தெரியவருகின்றது.

### பள்ளிவாசல்களின் எதிர்ப்பு

ஊர்காவல் படையினரும், வேறுசில ஆயுதம் தாங்கிய குழுக்களும், (7 ஆம் பக்கம் பார்க்க)

**இப்னு தாஹா**

# தெய்வீக மனிதன்

உலகத்தை ஈடேற்ற வந்தவர்கள் அவதார புருஷர்கள். அவர்களிடம் தெய்வீகம் வாழ்கிறது. இந்தப் பூ உலகத்தில் எத்தனை ஜீவராசிகள் உண்டோ அத்தனை சுபாவங்கள் உண்டு அவதார புருஷர்கள் மானிட சரீரம் படைத்தவர்களாக இருந்தாலும் சகல ஜீவராசிகளிடத்திலும் இறைவனையே கண்டார்கள்.

இமயஜோதி சுவாமி சிவானந்த மகராஜ் சகல ஜீவராசிகளையும் நாராயண சொருபமாகக் கண்ட ஒரு தெய்வீக மனிதர். திருவொற்றியூரிலே ஓர் அவதூதர் இருந்தார். அவர் தெருவிலே போகிறவர்களைக் கண்டால் யானை போகிறது: குதிரை போகிறது; பாம்பு போகிறது; நரி போகிறது என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பெயர் வைத்து அழைப்பார். வடலூர் இராமலிங்க சுவாமிகளைக் கண்டபோது ஒரு தெய்வீக மனிதனைக் கண்டேன் என்று கூறினார்.

திருவனந்தபுரம் சுவாமி அபேதானந்தா அவர்கள் பகவானுடைய நாமத்தைப் பாடி சதா பாவ சமாதியில் இளைத்திருப்பவர்கள் இவர் ஒருநாள் ஹைதராபாத்தில் ஒரு வீட்டு மாடியில் உலாவிக்கொண்டிருந்தார்.

அப்போது ஆகாயத்தில் ஒரு ஜோதியைக் கண்டார். சுவாமிஜி பக்தர்களிடம் யாரோ ஒரு பெரியமகான் வானுலகம் சென்று விட்டதாகத் தெரிகிறது என்றார்கள்.

சுவாமி சிவானந்தர் 1963ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி இரவு 11 மணிக்கு மகா சமாதி அடைந்தார்கள்.

> சுவாமி சிவானந்தரின் நூற்றாண்டு இப்போது கொண்டாடப்படுகிறது.

இதையே அபேதானந்த சுவாமிகள் ஜோதியாகக் கண்டார்கள் மறுநாள் காலையில் வானொலியிலும் தினசரிகளிலும் சுவாமி சிவானந்தர் மகா சமாதி அடைந்த செய்தி வந்தது. வேறு எவராலும் காணமுடியாத இந்த ஜோதியை சுவாமி அபேதானந்தர் ஒருவரால்தான் காணமுடிந்தது.

ஒரு மகானை இன்னொரு மகானால்தான் அறியமுடியும்.

இறைவன் அண்ட [illegible] வழங்குகிறார். அவன் [illegible] அத்தகைய ஜோதிகளே, சுவாமி சிவானந்தருடைய மகா சமாதிக்குப் பின்னர், அவருடைய உத்தம சீடராகிய சுவாமி சிதானந்தா அவர்கள் சிவானந்தருடைய அருளுபதேசங்களை உலகம் முழுவதும் பரப்பி உலகத்தைதாய

**சுவாமி நிர்மலானந்தா - ரிஷிகேஷ்**

தெய்வீக மயமாக்கி வருகின்றார்கள்.

சுவாமி சிவானந்தருடைய நூற்றாண்டு விழா 1987 செப்டம்பர் மாதத்தில் நடைபெற இருக்கிறது.

1986, செப்டம்பர் 8 ஆம் தேதி தொடங்கிய நூற்றாண்டு விழா ஆரம்பமாகிவிட்டது.

நூற்றாண்டு விழாவின் ஞாபகார்த்தமாக சிவானந்தர் பிறந்த பத்தமடைக் கிராமத்தில் சிவானந்தா இலவச மருத்துவமனை ஒன்று மிகப்பெரிய அளவில் உருவாகி வருகின்றது. ரிஷிகேசம் சிவானந்த ஆச்சிரமத்திலும் பல நினைவுக்கட்டடங்கள் ஆரம்பமாகி உள்ளன. உத்தரப்பிரதேச ஆட்சியாளர் கங்கைக்குமேலாகப்புதிய இரும்புப் பாலம் ஒன்று அமைத்து அதற்கு 'சிவானந்த ஜூலா' என்று பெயர் சூட்டி உள்ளனர். இந்திய அரசும் 8 - 9 - 86ல் சிவானந்தருடைய உருவம் பதித்த முத்திரை வெளியீடு செய்துள்ளது.

சுவாமியின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக சுவாமியால் எழுதப்பட்ட நூறு ஆங்கிலநூல்கள் இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளிலும் வெளிவர ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழ் நூல்கள் வெளியிடும் பொறுப்பை இராசிபுரம் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தினர் ஏற்றுக் கொண்டுள்ளனர் ★

## இக்கணமே தர்மம் செய்க

உயிருள்ள போதே தருமம் பண்ணுங்கள். நீங்கள் இறந்த பிறகு ஏதோ ஓர் தர்மத்திற்கு உங்களுடைய சொத்து உபயோகப்பட வேண்டும் என்று உயில் எழுதாதீர்கள். இது மறைவுபட்ட சுயநலம். உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொடுக்க நீங்கள் விரும்பவில்லை என்பதாகும். எதையாவது கொடுக்க விரும்பினால் இக்கணமே தருமம் செய்க. இக்கணமே செய்க!

சுவாமி சிவானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் எங்கும் சந்தேகம்




## அத்தியாயம் பத்து

கதிரையில் உட்கார்ந்த தேவனின் மடியில் என் மகன் கண்ணன் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கின்றான். தேவன் என்னைப் பார்த்து ''என்ன மச்சான்! இன்றைக்கு உன்ரை முகம் ஒரேயடியாய் வாடிப்போயிருக்கிறதே? என்ன விஷயம்!'' என்கிறான்.

நான் ஏதோ மனதின் தீர்மானமான முடிவுடன் 'தேவன்!' என்று அழைக்கிறேன். ''இனிமேல் நீ இங்கு வருவதை நிறுத்திக்கொள்'' என்கிறேன் எங்கோ மேலே பார்த்தபடியே.

ஒரு கணம் என்னை நிமிர்ந்து பார்த்தவன் ''என்ன மச்சான் பகிடி விடுகிறாய்?'' என்கிறான் சுவாரஸ்யமில்லாமல்.

எனக்கு மனதிலெழுந்த துக்கம் அழுகையாகப் பீறிடுகிறது. முயன்று அடக்கிக்கொள்கிறேன். இருந்தாலும் அதைத் தேவன் கண்டு விட்டான்.

''ஏன் மச்சான் அழுகிறாய்? இன்றைக்கு இங்கே என்ன நடந்தது?'' என்கிறான் தேவன்.

நான் என்னத்தைச் சொல்ல முடியும்?

''நீ இங்கு வந்து போவது அப்பாவுக்குப் பிடிக்கவில்லை'' என்கிறேன் சுருக்கமாக.

''ஏனாம்?'' அவனது கேள்வி இது.

'ஏனோ எனக்குத் தெரியாது. அதனால் இனிமேல் நீ இங்கு வர வேண்டாம்'' அவனது முகத்தை நேருக்கு நேர் பார்க்கத் துணிவில்லாமல் நிலத்தைப் பார்த்தபடி இதைச் சொல்கிறேன்.

'ஓஹோ' என்கிறான் சிறு நகையொலியோடு. ''இவ்வளவு நாளும் நான் வந்து கொண்டிருந்தேன். இப்போது மட்டும் வராதே என்று சொல்லுவதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதில்லையா?''

நான் எப்படிக் காரணத்தைக் கூற இயலும்?

''எனக்குத் தெரியாது!'' என்கிறேன் சுருக்கமாக.

''அப்படியென்றால் மாமா வரட்டும். அவரையே கேட்டுத்தெரிந்து கொள்கிறேன்''

என்ன சங்கடமான நிலை இது இப்போ இந்த வீட்டில் கண்டால் அப்பா என்ன செய்வாரோ தெரியாது. போதாததற்கு இவனோ ஒரு முரடன் கடவுளே! இதற்கு என்ன வழி! நானே உண்மைக் காரணத்தைக் கூறி விட்டால் என்ன? என்ற எண்ணம் மனதில் எழுகிறது.

''தேவன்! அப்பா சொல்லப் போகிற காரணத்தை நானே சொல்கிறேன்'' என்கிறேன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு.

''அப்படி வா வழிக்கு'' என்கிறான் சுவாரஸ்யமின்றி.

''தேவன், நீ ஏதோ தவறான நோக்கத்தில், என்னைச் சந்திக்கத்தான் இங்கு அடிக்கடி வருகிறாய் என்று ஊரில் பேசிக் கொள்கிறார்கள்''

'மச்சான்!' என்று கூவி விடுகிறான் தேவன். அவன் இதைச் சற்றும் எதிர்பார்த்திருக்கமாட்டான். அவன் முகத்தில் தோன்றும் கோபத்தின் சாயல் என்னைத் திடுக்கிட வைக்கிறது.

''யார் கட்டி விட்ட கதை இது?'' தேவன் கர்ஜிக்கிறான்.

''யாருக்குத் தெரியும்? ஊரில் பேசிக்கொள்கிறார்கள்.''

''இது யார் கட்டி விட்ட கதை என்று உனக்கு உண்மையில் தெரியாதா மச்சான்''

'தெரியாது' என்கிறேன் சுருக்கமாக.

''சத்தியமாகத் தெரியாது!''

''சத்தியமாகத் தெரியாது'' என்கிறேன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு.

''இப்படி அபாண்டமாகப் பழி சுமத்தியவர்களை நான் கண்டுபிடிக்காமல் விடப் போவதில்லை'

தேவன் குமுறுகிறான்.

அதனால் என்ன பயன் விளைந்து விடப் போகிறது தேவன். நெருப்பில்லாமல் புகையாது. என்று தானே சொல்வார்கள்'

'மச்சான், யாரோ, எப்போதோ சொன்ன பழமொழியை வைத்துக் கொண்டு இப்படி ஒரு பழியை உன்மீது சுமத்துவதா? நெருப்பில்லாமல் புகையாது என்று சொன்னாய்! இல்லை, நெருப்போடு தான் புகையப் போகிறது இருந்து பார் நீ' தேவன் ஆவேசத்தோடு பேசுகிறான்.

'என்னடா தேவன், நீ என்ன சொல்கிறாய்?' என்கிறேன் ஆத்திரத்தோடு.

'உண்மைதான் மச்சான். இந்தக் கதையை யார் கட்டினார்களோ அவர்களது வீட்டை நெருப்போடு புகையச் செய்கிறேனா, இல்லையா பார்?'

'தேவன்!' என் குரலில் இத்தனை ஆவேசமா? 'நடந்ததைவிடு; இனிமேல் நீ இங்கு வராமல் விடுவது தான் நீ இந்த மச்சானுக்குச் செய்கிற உதவி'' என்கிறேன் நான்.

சரி, நீ சொல்லுகிறது மாதிரி நடக்கிறேன். ஆனால் இந்தக் கதையை கட்டியது யார் என்று மட்டும் சொல்லிவிடு' என்கிறான் தேவன்.

'எனக்குத் தெரியாது'' என்கிறேன் உறுதியோடு.

'நீ பொய் சொல்கிறாய்! கூவுகிறான் தேவன். சரி, பரவாயில்லை, மாமா வரட்டும். அவருக்குச் சொன்னவன் யார் என்று கேட்டு, அப்படிஒவ்வொருவராய்க்கேட்டுமூல வேரைப் பிடித்துக் கொள்கிறேன்' தேவனின் குரலில் அதே ஆத்திரம்.

'அதனால் என்ன பயன்?' என் குரல் உடைந்து ஒலிக்கிறது 'மச்சான் அநீதியைக் கண்டு பயந்து ஓடினால், பின்னால் துரத்துவது தான் இந்த உலகத்தின் குணம்; எதிர்த்து நின்றால் - தானே வாலைச் சுருட்டிக் கொள்ளும்.'

தேவன், ஞானம் பேசாதே. கொஞ்சம் சிந்தித்துப் பார் என்னதான் இருந்தாலும் மற்றவர்களின் கண்களில் சந்தேகம் ஏற்படும்படியாக நாங்கள் பழகியது தவறுதானே உலக வாயை மூடலாம்; ஊர் வாயை மூடமுடியுமா?' எனக்கும் இப்படிப் பேச வருகிறதேயென்று என்னுள் ஆச்சரியம்.

> என்னதான் இருந்தாலும் மற்றவர்களின் கண்களில் சந்தேகம் ஏற்படும்படி நாங்கள் பழகியது தவறுதானே... ஊர் வாயை பின்பு மூடலாமா?...

'மச்சான், நாங்கள் என்ன ரோட்டிலும், வெளியிலும் தனிமையில் சந்தித்தோமா? நான் உன்னுடைய மச்சான் தான். உன்னுடைய வீட்டிற்கு நான் வந்து மாமா, மாமியிருக்கிற போதே கதைத்தும் பழகியது இல்லையா? இதற்குப் போய் நாக்கூசாமல் உன் மீது இப்படி ஒரு பழியா? இந்தக் கதையைச் சொன்ன நாக்கை அப்படியே துண்டித்துப் போடவேணும்' ஆத்திரம் வந்தால் தேவன் இப்படிப் பொங்குவது வழக்கம்.

இதற்கு என்னால் என்ன பதிலைக் கூற முடியும்? சந்தேகம் ஏற்படும்படியாக விகல்ப எண்ணங்களோடா நாங்கள் பழகினோம். கூடவே இந்த முரடன் என்ன செய்யப் போகிறானோ என்ற பயமும் மனதில் எழுகிறது.

இவன் கட்டில் நிற்கிறானேமாடு எந்த நட்டாமுட்டித்தனங்களிலும் இறங்கத் தயங்காதவன் இப்பொழுது என்னால் என்ன செய்ய இயலும்?

ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. உண்மையைத் தெரிந்து கொள்ளாத வரையில் இவன் இந்த இடத்தை விட்டுப் போகமாட்டான். மனதைத் திடப்படுத்திக் கொண்டு சொல்கிறேன் —

'தேவன், இப்படிக் கதை கட்டியவர் யார் என்று உனக்குச்சொல்லுகிறேன். ஆனால் அதற்கு முன்னால் நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தர வேண்டும்''

''என்ன சத்தியம்?'' என்கிறான் தேவன்.

''அவர்களுக்கு உன்னால் எந்தக் கெடுதலும் நேரக்கூடாது. அவர்களிடம் போய் குழப்பம் விளைவிக்கக் கூடாது.'

அரை மனதோடு, 'சரி' என்கிறான். எங்கே என்றபடி என் கையை நீட்டுகிறேன். கையிலடித்துச் சத்தியம் செய்கிறான்.

'அடுத்த வீட்டு நவமணிதான் இப்படிக் கதை கட்டியவள்'' நான் தயங்கித் தயங்கிச் சொல்கிறேன்.

சில விநாடிகள் அவன் முகத்தில் உணர்ச்சிகள் தாண்டவமிடுகின்றன. ஆச்சரியம் தோன்றி, அதுவே அடுத்தகணம் ஆவேசமாக மாறுகிறது எனக்குத் திகில் பற்றிக்கொள்கிறது.

தேவன் கதிரையிலிருந்து திடீரென்று எழுகிறான்.

'சரி மச்சான், நான் போகிறேன்; நீயாகக் கூப்பிட்டாலொழிய இனி ஒரு தரம் இங்கு வர மாட்டேன் சரிதானே?' என் மகன் கண்ணனைத் தூக்கி முத்தமிடுகிறான்.

'எனக்குக் கொடுத்த வாக்குறுதி?' நான் தயங்கித் தயங்கிக் கேட்கிறேன்.

'பயப்படாதே! நிச்சயம் கொடுத்த வாக்குறுதியை மீறமாட்டேன்''

எனக்கு மனதுக்குள் இப்போதும் ஐயம்தான். கோபம் வந்தால் பின் விளைவுகள் எதையுமே சிந்தித்துப் பார்க்காதவன் இந்தத் தேவன். இந்தச் சத்தியம் அவனுக்குப் பெரிதல்ல; கடவுளையே நம்பாதவன் இந்தச் சத்தியத்திலோ நம்பிக்கை வைக்கப் போகிறான் நான் கடைசி ஆயுதத்தையும் பிரயோகிக்கின்றேன்.

'தேவன், எனக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி நீ ஏதாவது கலாட்டா செய்தால், உன் மச்சானை உயிரோடு பார்க்கமாட்டாய்'

ஒரு கணம் திடுக்கிட்டு மரம்போல் நிற்கிறான். அவன் கண்ணின் ஓரத்தில் கண்ணீர் கரை கட்டுகிறது. கோழைதான் அழுவான்; வீரனும் அழுவானா? எனக்கு வியப்பாயிருக்கிறது. ஒரு நிமிடம் அப்படியே நின்றவன் மௌனமாக வெளியேறுகிறான். என் கடைசி வார்த்தைகளுக்கு நிச்சயம் பலன் உண்டு என்று படுகிறது.

எந்த வீரனும் அன்புக்கு முன்னால் அடிமை அன்புக்கு ஏங்கி வாழ்ந்த இந்தத் தேவன் என் சொற்களுக்கு மட்டும் ஏன் இப்படிக் கட்டுண்டு நிற்க வேண்டும்? எனக்கே வியப்பு மேலிடுகிறது.

அவன் போய்விட்ட பிறகு எனக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வருகிறது என்மேல் உண்மையான பாசம் வைத்து தம்பிபோல் பழகிய தேவனை உயிரோடு இழந்து விட்டவன் போலத் தேம்பித் தேம்பி அழுகிறேன். ✱

(வளரும்)

---

# சங்கிலி மன்னன் 'ஊர்கோலம்' புறப்பாடு

**பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டுமோதிய நல்லூர் அரசு (பகுதி : பதினைந்து அ)**

ம. க. அ: அந்தனிசில்

நல்லூர் கோட்டையில் வெற்றிச் சங்கு முழங்க ஜெயபேரிகை ஒலித்து எதிரொலித்துக் கொண்டிருக்கிறது......

வெற்றி உலாவுக்கு ஆயத்தமான வேங்கை நிகர் வேந்தனுக்கு அரண்மனையின் அழகு மணிமண்டபத்தில் தேன்மொழி, ஏழிசை நாயகி, யாழினி, கலாவல்லி, செம்பியன் வானதி பிறதாதியர் சகிதம் ராணி பெரிய நாச்சியார் ஆராத்தி எடுத்து குங்குமத்திலகமிட்டு 'வெற்றி வேந்தன் பல்லூழி காலம் வாழ்க' என வாழ்த்தி வழியனுப்புகிறாள்.

அவ்வமயம் மணிமண்டபத்துக்கு வந்து சேர்ந்த மதிமந்திரி பரநிருபசிங்கன் மன்னனை ஆரத்தழுவி முத்தம் கொடுக்கிறான். மன்னனும் மந்திரியைத் தழுவி முத்தமிடுகிறான்.

மன்னனின் முத்தம் இரத்த பாசத்தின் சின்னமாகப் பதிக்கப்படுகிறது. ஓர் கணம் அண்ணனும் தம்பியும் சிரித்து மகிழ்கின்றனர். ஆனால் மந்திரியின் முத்தமும் மகிழ்வும் வெறும் மாய்மால மென்பதை யார்தான் அறிவர்?

### யானையும் குதிரையும்

மணிமண்டபத்திலிருந்து பரிவாரங்கள் புடைசூழ புறப்பட்ட மன்னன் வெற்றி உலாவில் தன் வாகனமான பட்டத்து யானையின் பக்கம் சென்று அதன் கன்னத்தில் தட்டிக் கொடுக்கிறான் குட்டி மலைபோல் மதமதத்து திகழ்ந்த ராஜ யானை ராஜாவைக் கண்டதும் அவனது வெற்றிக்காகத் தனது வாழ்த்துதலைத் தெரிவிப்பதுபோல் தும்பிக்கையை மேலே உயர்த்தி உரத்த தொனியில் பிளிறி நிற்கிறது...... யானையின் எதிரில் சற்றுத் தள்ளி நின்ற மன்னனின் குதிரையும் மன்னனைக் கண்டதும் அவனை அழைப்பதுபோல் கனைக்கத் தொடங்குகிறது.

அதை உணர்ந்து கொண்ட மன்னன் தன் மனதிற்குள் சிரித்த வண்ணம் குதிரையின் அருகே சென்று அதன் பிடரியில் அன்பாய்த் தடவிக் கொடுக்கிறான். குதிரைக்கு மன்னனென்றால் உயிர்! மன்னனுக்கு தன் குதிரைமேல் உயிர்! ஆம், அது சாதாரணமான குதிரையா?

போர்க்களத்தில் தன் குதிரையின் பாய்ச்சலையும் மாய்ச்சலையும், கனைப்பையும் சினப்பையும், முன்னங்கால் பின்னங்கால்களால் எதிரிகளுக்கு அது கொடுத்த அடிகளையும், உதைகளையும் மன்னன் சுலபமாக மறந்து விடுவானா? வெள்ளையரை வென்ற வெம்போரிலே மன்னனின் வெண்குதிரையும் பங்காளியல்லவா? மீண்டும் அதன் பிடரி ஜடையிலே மன்னன் இதமாகத் தடவிக் கொடுக்கிறான். மன்னனின் கட்டளைப்படி அவனின் வெண்குதிரையும் வெற்றி உலாவில் கலந்து கொள்ள ஏற்பாடாகிறது.

அதன் நெற்றில் செம்மஞ்சள் குஞ்சம் கட்டி முதுகில் ஜெருகை இழைப் பட்டாடை போர்க்கப்படுகிறது.

மீண்டும் ராஜயானைக்குப் பக்கத்தில் வந்த மன்னன் அதன் கன்னத்தில் செல்லமாகத் தட்டிக் கொடுக்கவே மெல்லமாக முழங்கால் குறிப் பணிந்து கொடுத்த பட்டத்து யானை தன்மீது மன்னன் ஏறிக்கொண்டதும் சிங்கக்குட்டி யொன்று தன் முதுகில் அமர்ந்திருப்பது போன்ற பெருமையுற்று பிளிறத் தொடங்குகிறது அதைக் கண்டு மன்னனின் குதிரையும் ஏட்டிக்குப் போட்டியாக கனைக்கத் தொடங்குகிறது.

> வெள்ளையரை எதிர்த்து செருக்களத்தில் சமராடி வீர சுவர்க்க மடைந்த இந்தமிழ் வீரர்களுக்கு மன்னனின் வீர அஞ்சலி!

### வெற்றி உலா

களிறு பிளிற, புரவி கனைக்க கொம்புக் குழல் ஒலிக்க, ஜெயபேரிகை முழங்க நானிலம் போற்றிடும் நல்லூரின் கோட்டையிலிருந்து மன்னனின் வெற்றிஉலா புறப்படுகிறது.

நந்திக்கொடிவேந்திய குதிரை வீரன் முன்னே செல்ல, நல்லூர் சைன்யத்தின் இசைப்பிரிவினர் வெற்றியிசை மீட்டியவாறு சென்று கொண்டிருக்கின்றனர். அதைத் தொடர்ந்து வாளேந்திய போர்வீரர் அறுவர் இருவரிருவராகக் குதிரைகளில் செல்ல பின்னால் இலம்படி வீரர்கள் சிலம்பு விளையாடிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

அதையடுத்து இருபது மட்டக்குதிரைகள் இவ்விரண்டாகச் சென்று கொண்டிருகின்றன...... மட்டக் குதிரைகளின் முதுகுகளில் கட்டப்பட்ட கொட்டு முரசுகளை முரசறைவோர் முழக்கியவாறு செல்கின்றனர்;

கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் மட்டக் குதிரைகளும் கழுதைகளும் ஏராளமாகவிருந்தன. இன்று நெடுந்தீவில் ஆயிரக்கணக்கான மட்டக் குதிரைகளும், மன்னாரில் கழுதைகளும் வாழ்வதைக் காணலாம். குமரிக்கண்டத்தின் கடல் விழுங்காத சிறு பகுதிகளில் இலங்கைத் தீவும் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்குதிரைகளைத் தொடர்ந்து சுருள்வாள் வீரர்கள் பம்பரம்போல் சுழன்று இரு கரங்களாலும் சுருள்வாள்களைச் சுழற்றி விளையாடிய வண்ணம் சென்று கொண்டிருக்கின்றனர். அதையடுத்து அலங்காரம் பூண்டு சிருங்கார நடைபோடும் மன்னனின் குதிரையை குதிரை வீரனொருவன் வழி நடத்திச் சென்று கொண்டிருக்கின்றான். தொடர்ந்து ஈட்டி வீரர் அறுவர் குதிரைகளில் சென்று கொண்டிருக்கின்றனர்.

வழிநெடுகிலும் சீனடி, சிலம்படி, சுருள்வாள் வீச்சு, கட்டாரிச் சண்டை இத்தியாதி வித்தைகளை இதுவரை கண்டு மெய்சிலிர்த்து நின்ற குடிமக்கள் பல்லாயிரவர் இப்போது சங்கிலி மன்னன் வந்து கொண்டிருக்கும் பாங்கான காட்சிதனைக் கண்டு குதூகலிக்கின்றனர் சிறுவர் சிறுமியர் குதித்து கும்மாளமிடுகின்றனர்.

தென்னோலை தெட்டியால் புனையப்பட்ட ஊது குழல்களை இளவல்கள் ஊதி மகிழ்கின்றனர்..... ஊதி தம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர்.

### வெற்றி வேந்தன்

அசையும் மலைபோல் மெதுவாக வந்து கொண்டிருக்கும் பட்டத்து யானைமேல் வெற்றி வேந்தன் ஊர்கோலம் வந்து கொண்டிருக்கிறான். யானையின் இருமருங்கிலும் சேவகர் இருவர் மன்னனுக்கு ஆலவட்டம் பிடித்தவாறு வந்து கொண்டிருக்கின்றனர்... யானையின் பின்னே காலாட்படை தளபதி பராந்தகனும் காலாட்படைத் துணைத்தளபதி முனியப்பனும் கம்பீரமாக வந்து கொண்டிருக்க, இறுதியாக கவச உடை அணிந்த ஈட்டி வீரர் அறுவர் குதிரைகளில் வந்துகொண்டிருக்கின்றனர்

மணிமுடி தரித்து பட்டத்து யானைமேல் பரந்த மார்பும் விரிந்த தோளுமாய் கம்பீரமாக பவனி வந்து கொண்டிருக்கும் [illegible] மன்னனைக் கண்டு மக்களெல்லாம் அகமகிழ்கின்றனர்.

அசையும் மலையில் வீற்றிருக்கும் வெற்றி வேந்தன் வீதியின் இருமருங்கிலும் அலைபாயும் மக்கள் வெள்ளத்தைக் கண்டு இறும்பூதெய்துகின்றான். குடிமக்களின் மகிழ்ச்சிப் பிரவாகம் கண்டு பேருவகை கொண்ட அவன் தன் கரங்களை உயர்த்தி அசைக்கின்றான். அதைக் கண்ட மக்கள் பெரும் ஆரவாரஞ் செய்கின்றனர்.

மன்னனின் வெற்றி உலா ஆரியர் குளம் (ஆரிய குளம்) வரை சென்று மீண்டும் அதே வழியில் திரும்பி வந்து கொண்டிருக்கிறது.

சிங்க ஆரியன் என்ற இயற்பெயரைக் கொண்ட மன்னன் கூழங்கை சக்கரவர்த்தி என்பானால் கட்டப்பட்டதே ஆரியர்குளம் அக்காலத்தில் ஆரியர்குளம் பெரிய குளமாகவிருந்தது. மன்னர்களின் ஆட்சியின் பின்னர் அக்குளம் தூர்ந்து போயும் மக்கள் குடியேறியும் கால்பங்காக குறுகிக் கொண்டது.

மீண்டும் வருவானோ மன்னன் என வழி நெடுகிலும் கால்கடுக்கக் காத்துநின்ற மக்கள் மீளவும் போர்வீரர்களின் வீரதீர சாகஸ விளையாட்டுகளையும், அதனைத் தொடர்ந்து பட்டத்து யானையில் பவனி வரும் பைந்தமிழ் மன்னனையும் கண்டு ஆர்ப்பரிக்கின்றனர்.

ஆனந்தம் மேலிட ஆரவாரம் புரிகின்றனர்.

இவ்வாறாக வேந்தனின் வெற்றிஉலா நல்லூர் கோட்டையை அடைந்து இனிது முடிவுறுகிறது. நல்லூர் [illegible] கொண்டிருக்கிறது.

### இராஜ சபையில்

மன்னனின் வெற்றி உலாவைக் கண்டுகளிக்க பலகாத தூரமிருந்து நல்லூருக்கு வந்த மக்கள் இப்போது நல்லூர் கோட்டைக்கு விழுந்தடித்து விரைந்து கொண்டிருக்கிறார்கள். (1 காத தூரமென்பது சுமார் இரண்டு மைல்களாகும் 10 காத தூரம் 1 காவதம் ஆகும்)

ஏலவே இராஜசபை நிரம்பி விட்டதால் சபை முன்றலில் மக்கள் திரள்கின்றனர். எள் போட்டால் எள் விழாத ஜன நெரிசல்! எங்கும் மகிழ்ச்சிப் பேரலை!

இராஜ சபையின் உள்ளே மந்திரி பரநிருபசிங்கன் வீற்றிருக்கிறான். அவனையடுத்து சேனாதிபதி வீரமாணிக்கதேவனும் தளபதிகள் சமரவாகு தேவன், கல்விடைத் தேவன், பராந்தகன் (புதிய) கடற்படைத் தளபதி, வாயுதேவன் துணைத் தளபதிகள் வரைப்பிட்டி வன்னியன், முகமுடி முனியப்பன் வீற்றிருக்கின்றனர். இரண்டாம் வரிசையில் மாதாக்கர்கள் வீற்றிருக்கின்றனர்.

மாதாக்கர் எல்போர் பஞ்சாயத்துக்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் கொண்டவர்கள்.

எதிர்ப்புறம் அவைப் புலவர் வித்தகனார் வீற்றிருக்கின்றார் அவரையடுத்து மன்னார் அதிபதி மகதனும் ஊர்காவற்றுறை அதிபதி சாக்கை வன்னியனும் சந்தரோட்டை அதிபதி அப்பாவு முதலியும் பிற இராஜப் பிரதானிகளும் வீற்றிருக்கின்றனர்.

மேற்கூறிய மூன்று அதிபதிகளும் சிற்றரசர்களென்ற அந்தஸ்தில் கணிக்கப்பட்டனர்.

இரண்டாம் வரிசையில் பஞ்சாயத்தார் வீற்றிருக்கின்றனர். சபையில் குடிமக்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் குடிமக்கள் நிறைந்து வழிகின்றனர்.

வெற்றி உலா முடிந்து அரண்மனைக்குச் சென்ற வேந்தன் இருநாழிகை கழிந்து இராஜசபைக்கு வந்து கொண்டிருக்கிறான் சபையின் வலப்புற வாயிலில் நின்ற காவலர் மன்னனை வணங்கி நிற்கின்றனர். சபையில் நிசப்தம் நிலவுகிறது.

தமிழரின் கணிப்புப் படி 60 தற்பரை 1 விநாடி — 60 விநாடி 1 நாழிகை— 60 நாழிகை ஒரு நாளாகும். 365 நாள் 15 நாழிகை 31 விநாடி 15 தற்பரை 1 வருடமாகும். வருடங்களின் பெயர்கள் அறுபது. இன்றைய அக்ஷய வருடம் இனி 60 ஆண்டுகளின் பின்னர் தான் வரும். அதே போல் மாறி மாறி வரும் யுகங்கள் நான்கு. அவை சதுர்யுகம் என அழைக்கப்படும். சதுர்யுகத்தில் 43,20 000 வருடங்களாகும். அதில் கிருதயுகம் 17,28,000 வருடங்கள், திரேதா யுகம் 12,96,000 வருடங்கள், துவாபர யுகம் 8,64,000 வருடங்கள். கலியுகம் 4,32,000 வருடங்களாகும். இன்றைய கலியுகத்தில் 5087 ஆம் வருடம் நடந்து கொண்டிருக்கிறது.

இதற்கு முந்திய துவாபர யுகத்தின் கடைசிக் கால கட்டத்தில் தான் தமிழரின் ஆதி தாயகமான குமரிக் கண்டத்தின் (இலெமூரியா கண்டம்) பாரிய நிலப் பகுதியை இருமுறைகளில் பெருங்கடல் விழுங்கிக் கொண்டது.

### வேந்தனின் உரை

கட்டியக்காரன் கட்டியங் கூறுகிறான்.

இராஜாதி ராஜ ராஜ கம்பீர வீர மார்த்தாண்ட செகராஜசேகர வேந்தன் வருகிறார். பராக்!

இராஜ சபைக்கு வந்த சங்கிலி மன்னன் சிம்மாசனத்தில் அமர்ந்து கொள்கின்றான். மன்னனுடன் வந்த ராணி பெரிய நாச்சியார் மன்னனின் இடப்புறமும் இளவரசன் குமாரன் வலப்புறமுமாக அமர்ந்து கொள்கின்றனர். சபையோர் எல்லோரும் எழுந்து மன்னனை வணங்கிவிட்டு அமர்கின்றனர். அரண்மனை மாதர் அரசனுக்கும் அரசிக்கும் இளவரசனுக்கும் வெண்சாமரம் வீசி நிற்கின்றனர்.

அவைப்புலவர் ;- (எழுந்து) சந்தனம் கமழும் செந்தமிழ் நாட்டின் வெற்றி வேந்தன் பல்லூழி வாழ்க!

மன்னன் :- வீர மறக்குலமே! என் தமிழ்ப் பெருங்குடி மக்களே! வெற்றி விழாவின் ஓரங்கமாக இங்கு யாம் குழுமியுள்ளோம். முதற்கண் வெள்ளையரை எதிர்த்த வெஞ்சமரில் திரமுடன் சமராடி வீர சுவர்க்க மடைந்த எம் இந்தமிழ் வீரர்களுக்கு வீர அஞ்சலி செலுத்துவோமாக!

(எல்லோரும் எழுந்து நின்று சிரம் தாழ்த்தி மௌன அஞ்சலி செய்து அமர்கின்றனர்).

(வளரும்)

---

## காரணம் என்னவோ?

ஒவ்வொரு கொலைக்குப் பின்னாலும் ஏதாவது ஒரு காரணம் இருப்பது நியாயம்.

ஆனால் அமெரிக்காவில் ஒரு ஹோட்டலின் முன்பு வைக்கப்பட்டிருந்த மனித அளவு சிலையொன்று கடத்தப்பட்டு அதன் மண்டையில் துப்பாக்கியால் சுடப்பட்டு புதருக்குள் ஒளிக்கப்பட்டிருந்தது!

நியாயமான காரணம் இதற்கும் இருக்குமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல் கடந்த கடிதம்

### எங்கும் எதிலும் கலப்படம்?

தம்பி,

கலப்படப் பொருள்களால் மக்கள் அடையும் உடல்நலக் கேடுகள் பற்றி எழுதியதைப் படித்தேன்.

''எங்கும் எதிலும் கலப்படம்!'' என்ற பழைய சினிமாப் பாடல் நினைவுக்கு வந்தது!

கலப்படப் பொருள்களைப் பரிசோதித்து முடிவு கூற ஆய்வு நிலையங்கள் உண்டு; தரநிர்ணய சபைகள் உண்டு. அவற்றை உற்பத்தி செய்பவர்களையும் விற்பனை செய்பவர்களையும் தண்டிக்க சட்டம் உண்டு!

ஆனால், தம்பி, நாம் இலகுவில் கண்டுகொள்ள முடியாத கலப்படமும் நாட்டில் மலிந்துவிட்டது. சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு, போலிகள் சிலவும், உரிமைப்போரில் 'உரத்தகுரல்' கொடுக்கின்றன!

வீடு வாசல்களைத் துறந்து, இரத்த பாசங்களை மறந்து, காட்டிலும் மேட்டிலும் கரந்துறைந்து, உயிரையே துச்சமெனத் தூக்கி எறியும் செம்மல்கள் ஒருபுறம்! விழாக்களை உருவாக்கி, மேடைகளைப் பெரிதாக்கி, வாய்ச்சொல் வீசும் வீரர் ஒருபுறம்! பொதுநலம் என்ற போர்வையால் சுயநலத்தை மூடி மறைத்து எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என எண்ணிச் சேர்ப்பவர்கள் இன்னொரு புறம்!!

இவை கண்டு போலிகளின் முகத்திரையைக் கிழிக்க வல்லவர்கள் இளைஞர்கள் என, தம்பி, நீ முணுமுணுப்பது எனக்கும் கேட்கிறது!

'மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம் கண்டது இல்'—(குறள் 1071)

மக்களோடு மக்களாகக் கயவரும் கலந்திருப்பதை—கலப்படமாகி இருப்பதை—வள்ளுவரே கண்டு நகைத்திருந்தார்!

பல 'சோலிகட்டிடையில்' சிக்குண்டிருக்கும் தம்பி, போலிகளின் கலப்படத்திலும் சற்று விழிப்பாயிருக்க வேண்டாமா!

அன்புடன்
—சிவா—

# அன்பிற்கு அடிமைப்பட்டாலும் ஆணவத்திற்குபெண்சாயக்கூடாது

பெண், பொன், மண் மூன்றும் ஆசையைத் தூண்டுபவை என்று கூறப்படும் கருத்தை நான் ஆதரிப்பதில்லை. காலப்போக்கில் பொன், மண் எப்படி மதிப்பில் அதிகரித்துக் கொண்டு போகிறதோ அதே போலத்தான் பெண்ணும் என நினைப்பவள் நான்.

மகள், மனைவி, தாய் என்று வளர்ந்து அன்பு செலுத்தி பிறருக்காக வாழ்ந்த தாலும் தான் பொன், மண் வரிசையில் பெண்ணும் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

இருந்தாலும் இந்தக் காலத்தில் பெண்ணின் நிலை என்ன?

ஒரு பெண் எப்படி வளர்க்கப்பட வேண்டும் என்ற கேள்வி எழும் அளவிற்கு அவள் நிலை மாறியதேன்?

பெண்ணை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வளர்த்தார்கள். பெண் இயல்பாகவே புத்திக் கூர்மையுடன் இருப்பவள். பொறுமைசாலி. இதை யாரும் மறுக்க முடியாது! இந்த பொறுமையும், திறமையும் நல்ல விதமான முறையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

'இவள் பெண். பெண்ணாகவே வளர்ந்து, ஒருத்தனைச் சார்ந்து பலவீனமாக நிற்க வேண்டியவள்' என்ற அடிமைத்தனமான எண்ணம் மறைய வேண்டும்.

அன்பிற்கு அடிமையாவதில் தவறில்லை ஆனால் 'அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும் அடிபணிய மாட்டோம்' என்ற லட்சியத்துடன் வளர்க்கப்பட வேண்டும்

பிறருடன் பழகுவது அதிலும் ஆண்களுடன் பழகுவதே தவறு என்ற மனப்பான்மை இந்தக் காலத்தில் வெகுவாக மாறிவிட்டது ஆண் பெண் சேர்ந்து கல்வி கற்கிறார்கள் ஒரே அலுவலகத்தில் வேலை பார்க்கிறார்கள். முன்பு இருந்த குறிப்பிட்ட துறைகளில் மட்டும் இன்றி பல துறைகளிலும் இன்று பெண்கள் படித்துப் பணியாற்றுகின்றார்கள்.

எந்தப் படிப்பானாலும் பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு படித்து முன்னுக்கு வருவது பெருமைப்படத்தக்கது.

சந்தோர், வீடு இரண்டும் இருவேறு இடங்கள் விட்டுப் பிரச்சினைகளை சந்தோசில் கொட்டிப் பிறர்து அனுதாபத்தைத் தேட முயல்வது பலவீனத்திற்கு அடிகோலும் நமது பிரச்சினைகளை நாமே தீர்க்க முயல்வது தான்விவேகம் சந்தோர் தொல்லைகளை அங்கேயே விட்டு விட்டு வீடு திரும்புவது சிறந்தது.

இந்தக் காலத்தில் பெண்கள் தங்கள் உரிமையை உணர்ந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்

படிக்கிறார்கள் உயர் பதவி வகிக்கிறார்கள்.

## லக்ஷ்மி

பிறருடன் பழகுவதில் கண்ணியம் காட்டுகிறார்கள்.

ஆனாலும் என்னைப் பொறுத்தவரை பெண் இன்னமும் ஆண் சமூகத்திற்கு அடிபணிவதை நிறுத்தவில்லை. வரதட்சணைக் கொடுமை ஒழிந்தால் தான் ஆண், பெண் இருவரும் சமம் என்ற உணர்வு நிலைக்கும். இன்றும் வரதட்சணை, சீர் என்ற கொடுமையால் உயிருடன் எரிக்கப்படுகிற அபலைப் பெண்களின் கதைகளைப்பற்றி படித்துக் கேட்டு மனம் பதைக்கிறோம்

பெண்கள் ஏன் அபலைகளாக இருக்க வேண்டும்?

உயிருடன் எரிக்கும் வரை கொடுமைகளைச் சகித்துக்கொண்டு ஏன் பலியாக வேண்டும்?

எதிர்த்துப் போராடி தன் கால்களிலேயே நிற்க முடியும் என்று ஏன் பொங்கி எழக்கூடாது

கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்து, விடுதலை பெற்று ஏன் தனித்து வாழ்ந்து காட்டக்கூடாது? தன் சுயகௌரவம் குலையாமல்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

> பிரபல தமிழ் எழுத்தாளர் லக்ஷ்மி (டாக்டர் திரிபுரசுந்தரி) அண்மையில் காலமானார். 'சுமங்கலி' சஞ்சிகையில் மிகச் சமீபத்தில் வெளிவந்த அவரது கட்டுரையை இங்கு பிரசுரிக்கிறோம்.

## ஞான சஞ்சீவி

### அத்வைதமும் பிற வாதங்களும்

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த ஜகமும், இந்த ஜகத்தில் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் ஜீவராசிகளும் எமக்குப் புலனாகின்றன.

ஜகத்தையும் ஜீவர்களையும், எமக்குப் புலனாகாத நிலையில், தாங்கி நிற்பது சர்வவல்லமை படைத்த பேரறிவாகிய பரம்பொருள்.

ஜகத்தில் கட்டுண்டு கிடக்கும் ஜீவர்கள் எண்ணிறந்த பிறவிகளை எடுத்து ஆன்ம ஈடேற்றம் பெற்று, முக்தி நிலையை அடைய வேண்டுமென்பதுதான் நியதி.

ஆனால் ஈசுவரனை நாடி நின்று புண்ணிய கருமங்களைச் செய்து மேல் நிலைக்குச் செல்பவர்களும் உண்டு பாபக் காரியங்களில் இறங்கி பின்தங்கி விடுபவர்களும் உண்டு.

இத்தத்துவம் பற்றி இந்துமத ஆச்சாரியர்கள் பல்வேறு கருத்துக் கொண்டிருந்தார்கள்

கி.பி 8ஆம் நூற்றாண்டில் கேரளத்தில் அவதரித்த ஆதி சங்கராச்சாரியார்தான் அத்வைத வாதத்தை முன்வைத்தவர்.

'அத்வைதம்' என்பது 'இரண்டல்லாதது' எனப் பொருள்படும். அதாவது, ஜகமும், ஜீவர்களும் வேறு, பரம்பொருள் வேறு அல்ல, எல்லாம் ஒரேபொருளே.

அப் பரம் பொருள் அகண்டமாயிருக்கின்ற சத்-சித்-ஆனந்தம். தன்னை ஜகம் ஆகவும், ஜீவர்கள் ஆகவும் தோற்றுவித்துக் காட்டிக்கொண்டிருக்கின்றது. அப்படிக் காட்டிக்கொள்ளும் சக்தியைத் தான் மாயை என்கிறோம்.

பரப்பிரம்மமும் அதிலிருந்து பிறக்கும் பிரகிருதி அல்லது சக்தியும் வேறு வேறல்ல எமது அஞ்ஞானத்தால் எல்லாம் வேறுவேறாக எமக்குத் தெரிகின்றன.

ஞானமடைந்த ஜீவன், ஆறு சமுத்திரத்தில் ஒன்றிவிடுவது போன்று, பரம்பொருளுடன் ஒன்றறக் கலந்து விடுகிறது. இதுதான் அத்வைதம் என்கிற பரந்த தத்துவத்தின் மூலாதாரமான கோட்பாடு

தமிழ்நாட்டில் கி.பி. 11ம் நூற்றாண்டில் தோன்றிய இராமானுஜாச்சாரியார் 'விசிஷ்டாத்

(6-ம் பக்கம் பார்க்க)

-அ. குமரகுரு-

# பலாத்காரமாக உணவூட்டியும் நிலைதளராத உண்ணு விரதிகள்

சிறிது நேரத்தில் துண்டுப்பிரசுரங்கள் வீசி எறியப்பட்டன.

'கோடிக்கணக்கான மக்கள் இதயத்தில் வாழும் தலைவரை சேவலம் போலீஸ் அதிகாரி அடித்துக் காயப்படுத்தியது இந்தத் தேசத்துக்கு இழைக்கப்பட்ட அவமானமாகும். இந்திய இளைஞன் அந்தச் சவாலைச் சந்திக்கக் காத்திருக்கிறான்; கடமைப்பட்டிருக்கிறான்;

'ஒரு மனிதனைக் கொல்வதால் நாங்கள் மகிழ்ச்சி கொள்ளவில்லை. அதற்காக வருந்தவே செய்கிறோம். அராஜக அடக்கு முறையின்போது

### அத்தியாயம் ஐந்து

இவை தவிர்க்கமுடியாதவை'.

சாண்டர்ஸ் கொலை பற்றித் துப்புத் துலக்க துப்பறியும் இலாகா சுறுசுறுப்படைந்தது

1929 ஏப்ரல் 8ந் திகதி டில்லி சட்டசபை கூடியது. பார்வையாளர் பகுதியில் பகத்சிங்கும் தோழர்களும் இருந்தனர். சட்டசபை தன் வேலைகளைக் கவனித்தது. தொழிலாளர் தலைவர்களைச் சிறையில் அடைத்த பின்னர் தொழிற் பாதுகாப்பு மசோதா நிறைவேறப் போகிறது. அதுபற்றி ஆபத்தங்கள் நடக்கின்றன.

#### சட்டசபையில் வெடிகுண்டு

பகத்சிங் சத்த வெடிகுண்டொன்றை வீசினான். இடிபோல் கேட்டது அக்குண்டுச் சத்தம். மூலைக்கொருவராக ஓடினர். சிலருக்கு காயமேற்பட்டது. உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. பகத்சிங்கும் தோழர்களும் தத்தம் துண்டுப் பிரசுரங்களை அள்ளி வீசினர்.

நீங்கள் ஓடவேண்டாம். ஆபத்தில்லாத குண்டைத்தான் வீசினோம் நானும் எனது தோழரும்தான் குண்டை வீசினோம். இந்தச் சட்டசபையால் விடுதலை



வராது என்பதை உணர்ந்தே குண்டெறிந்தோம். எங்களைக் கைதுசெய்யுங்கள் என பகத்சிங் வீரகர்ச்சனை செய்தான்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ம் ஒழிக என கோஷமெழுப்பிக் கொண்டிருந்த போது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

#### மக்கள் கவனம்

1929 - 30ம் ஆண்டு லாகூர் சதி வழக்கைப் போல் பொது மக்களின் கவனத்தைக் கவர்ந்த வழக்கு வேறெதுவும் கிடையாது. மத்திய சட்டசபையில் குண்டு வெடித்ததிலிருந்து பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூவரும் தூக்குக் கயிற்றில் தொங்கியது வரையிலும் அந்தக் கைதிகள் மீதும், அவர்களது வழக்கின் மீதும், கைதிகளின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மக்களின் முழுக் கவனமும் திருப்பப்பட்டிருந்தது.

பகத்சிங்கும் தோழர்களும் மக்கள் மனதில் குடியிருந்தார்கள். லாகூரில் இளைஞர்களின் வெடிகுண்டுச்சாலை ஒன்றை ஆளும் ஆங்கிலேய அரசு அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

உடனே கிஷோரி சுகதேவ் முதலிய தோழர்கள் கைதுசெய்யப்பட்டனர்' ஜெயகோபால் பொலீஸாருக்கு அடிபணிந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு பல தகவல்களை வெளியிட்டான். கிலவாரங்களுக்குள் பீமார், ஐக்கிய மாகாணம், பாஞ்சாலம் முதலிய மாகாணத் தலைவர்களும், தோழர்களும் கைதாகினர்.

இதனால் பகத்சிங் தோழர்களது கனவுகள், நம்பிக்கைகள் அனைத்தும் மங்கி மறைந்து போய்விட்டதாக உணர்ந்தனர்

#### உண்ணு விரதம்

1929 ஜூலை மாதம் 13 தோழர்களை நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

பகத்சிங் நடப்பதற்குச் சக்தியற்றவனு நீதிமன்றத்தில் காணப்பட்டான். எலும்பும் தோலும்தான் எஞ்சியிருந்தன பகத்சிங்கை நீதிமன்றுக்குத் தூக்கிக்கொண்டே வந்தனர்.

### பகத்சிங் வீரவரலாறு

சிறையில் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டனர். அடி உதையால் தினமும் அவர்கள் கலங்கினர் இதன் பயனாக

புத்தொளி

கைதிகள் அனைவரையும் நல்லபடி நடத்தவேண்டுமென்று உண்ணாவிரதமிருந்தனர்

உண்ணு விரதிகள் பல கோரிக்கைகளை சிறையதிகாரிகளுக்கு விடுத்தனர்.

சகல அரசியல் கைதிகளையும் ஒரே வகுப்பில் வைத்திருக்க வேண்டும். நல்ல உணவு கொடுக்கப்படவேண்டும். பத்திரிகைகள், புத்தகங்கள், எழுது கருவிகள் வழங்க வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கைகளாகும்.

#### பலவந்தம்

உண்ணு விரதிகளுக்கு நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டன. உணவை பலாத்காரமாக ஊட்ட முற்பட்டனர். ஊசி மூலம் உணவுச் சத்துக்களை ஏற்றினர்.

கைதிகள் தனித்தனி அறைகளில் அடைபட்டுக் கிடந்தனர் பலவந்தமாக உணவு ஊட்டியபோது ஏதோ தவறு நேர்ந்ததால் ஜதீன்தாஸ் மூர்ச்சித்துக் காணப்பட்டார். ஜதீன்தாஸ் சிறையில் அனைவரின் அன்பையும் பெற்றார் கதைகளையும் நகைச்சுவைச் சம்பவங்களையும் தினமும் சொல்லிக் குடல் குலுங்கச் சிரிக்கவைப்பார். சிறையிலிருந்தோர் உண்ணு விரதத்தைக் கைவிடவில்லை. பலாத்காரமாக உணவூட்டப்படவே அனைவரும் வாந்தி எடுத்தனர்.

உண்ணு விரதிகளின் அறைகளிலிருந்த தண்ணீரை மாற்றி பாலை நிரப்பினர்தொண்டைவரண்ட போதும் அவர்களால் நாக்கை நனைக்க முடியவில்லை. பால்குடங்களை அடித்து நொருக்கினர்.

உண்ணுவிரதம் பற்றி இங்கிலாந்துக்குச் செய்தி எட்டியது. மக்கள் உணர்ச்சியைத் தணிக்கச் சிறை அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் இறங்கினர். உண்ணுவிரதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென முடிவு செய்யப்பட்டது. இக்காலத்தில் சிறையிலிருந்த ஜதீன்தாஸ் இறந்துவிட்டார். இவர் மறைவு மக்களை ஓர் உலுக்கு உலுக்கியது.

(வளரும்)

# பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

### பிரார்த்தனை

இறைவனே!

நான் மோட்சத்துக்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்துடன் உன்னை வணங்கி இருந்தால் சுவர்க்கத்தின் கதவை எனக்கு மூடிவிடு!

நான்நரகத்திற்குப்போய் விடுவேனோ என்ற அச்சத்தினால் உன்னைத் துதித்திருந்தால் என்னை நரகத்தில் தள்ளிவிடு.

உன்னை நான் பலன் எதுவும் எதிர்பாராமல் ஆராதித்திருந்தால் என்னை உன் சந்நிதிக்கு அழைத்துக்கொள்.

— பாரசீகக் கவிதை.

### எழுத்து

எதை எழுதினாலும் அதை நாலுபேர் பாராட்ட வேண்டும். அல்லது திட்டவாவது வேண்டும்'

இரண்டும் இல்லையென்றால் எழுதுவதைவிட எழுதாமலே இருந்து விடலாம்.

— கல்கி

### உங்கள் விருப்பம்

சாக்கடை நீரிலே குப்பையைக் காண்பதா? அல்லது வானத்தைக் காண்பதா?

— அது உங்கள் விருப்பம்

### உலகின் மிக நீண்ட காதல் கடிதம்

உலக சாதனைகளின் பட்டியலில் மிக நீண்ட காதல் கடிதமாக கருதப்படுவது பரோடாவைச் சேர்ந்த பரேஷ்பரிக் எனும் பொறியியலாளர் தமது காதலிக்கு எழுதிய கடிதமாகும்

கடிதத்தின்நீளம் 1825 மீட்டர். 6,10,266 சொற்களைக் கொண்ட அக் கடிதத்தை எழுதி முடிக்க அவர் எடுத்துக்கொண்ட நாட்கள் 180.

அதை காதலி அஞ்சலாக மதித்தாளோ?! கஞ்சலாக மதித்தாளோ?!

### பேசினாலும்... பேசாவிட்டாலும்...

பேசத் தகுதியுள்ள ஒரு மனிதனைச் சந்தித்து அவனுடன் நீங்கள் பேசாமல் போய் விட்டீர்களானால் உங்கள் நேரத்தை வீணடித்து விட்டீர்கள்.

பேசத் தகுதியில்லாத ஒரு மனிதனைச் சந்தித்து அவனுடன் நீங்கள்பேசிக் கொண்டிருந்தால் அப்பொழுதும் உங்கள் நேரத்தை வீணடித்து விட்டீர்கள்.

### பிரசவத்தின் பின் விடுதலை

லாவோஸ் நாட்டில் சில பூர்வ குடிகளிடம் ஒரு விசித்திரமான பழக்கம் உண்டு. மனைவி பிரசவ வேதனைப்படும் போது கணவனை வீட்டுக்கு வெளியே தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு விடுவார்கள். பிரசவமான பிறகுதான் விடுதலை அவருக்குப் பாவம்!

### போகன் வில்லா பூச்செடி

இன்று போகன்வில்லா பூத்துக் குலுங்காத பங்களாக்களே இல்லை. அந்தப் பெயர் எப்படி வந்தது?

டி போகன்வில்லா என்ற பிரெஞ்சு நாட்டு மாலுமி ஒருவர் இதைக் கொண்டு வந்து பயிரிட்டுப் பிரபல்யமாக்கினார்.

அதன் காரணமாகவே இச் செடிக்குப் போகன் வில்லா என்ற பெயர் வந்தது.

### உலகில் பெரிய கேக்

கின்னஸ் சாதனைகள் சிலருக்குப் புதுமையான எண்ணங்களை உண்டாக்கி வருகின்றன.

மலேஷியாவில் ஒரு பிரபல ஹோட்டல் உலகத்திலேயே பெரிய கேக் ஒன்றைத் தயாரித்துள்ளது. கேக்கின் நீளம் 111 மீட்டர்.

இது அன்னாசிப்பழக் கேக். எண்ணூறு அன்னாசிப்பழங்கள் இதைத் [illegible]

### கல்வியா? செல்வமா?

ஓர் ஊரிலே ஒரு வைர வியாபாரிக்கு தருமசீலன், குணசீலன் என்னும் இரு புதல்வர்கள் இருந்தனர். வைர வியாபாரி தருமசீலனுக்கா அல்லது குணசீலனுக்கா தனது சொத்தைக் கொடுப்பது என எண்ணலானார்.

ஒரு நாள் இருவரையும் அழைத்து 'உங்களில் யார் இடைத்தற்கரிய செல்வம் கொண்டு வருகிறீர்களோ அவர்களுக்கே எனது சொத்து முழுவதும்' என்று கூறினார்.

அரிய மாணிக்கத்தைப் பெற இருவரும் வேற்றூர் சென்றனர். முதலில் மூத்தவனான தருமசீலன் பணம்தான் அரிய மாணிக்கம் என எண்ணி ஒரு நகைக் கடையில் வேலைக்குச் சேர்ந்தான்

இளையவனான குணசீலனோ கல்விதான் அரிய செல்வம் என நினைத்து ஒரு சிறந்த ஆசிரியரிடம் பாடம் பயின்றான்

இரு வருடங்களின் பின் இருவரும் வீடு திரும்பினர். தருமசீலன் வீடு திரும்பும் போது அவன் சேர்த்து வைத்திருந்த [illegible] கொள்ளைக்காரர்கள் பறித்துவிட்டனர்.

வீடு திரும்பிய இருவரும் தாம் சம்பாதித்தவற்றைக் கூறினர். தந்தையும் 'புதல்வர்களே! கல்விதான் கிடைத்தற்கரிய செல்வம், பணம் நிலையில்லாதது இதனை விளக்கவே இவ்வாறு கூறினேன்' என்று கூறினார் பின்பு 'சொத்தை எவ்வாறு யாரிடம் அளிப்பது?' என்று புத்திரரிடம் கேட்டார்.

தருமசீலனும் 'தந்தையே தம்பிக்கே கொடுத்து விடுங்கள் நான் உழைத்துச் சம்பாதிக்கிறேன்' என்று கூறினான். குணசீலனோ 'அண்ணனுக்கே கொடுங்கள். நான் கல்வி மூலம் உழைக்கின்றேன்' என்று கூறினான்.

தந்தையும் அவர்களுடைய சகோதர பாசத்தைக் கண்டு மகிழ்வுற்று சொத்தை இருவருக்கும் பிரித்தளித்தார்.

கல்வியே காசினியில் உயர்ந்த செல்வம். பணம் நிலையில்லாதது.

சி. பிரணவன்
(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

### குடியானவனும் பாம்பும்

ஒரு குடியானவன் அயலூருக்குச் செல்ல வேண்டி இருந்தது. அவன் பாதை வழியே நடந்து கொண்டிருக்கையில், அங்கே ஒரு பாம்பு குற்றுயிராய்க் கிடப்பது அவனுக்குத் தென்பட்டது.

சிவகாருண்யம் மேலிட்டவனுக்க் குடியானவன் பாம்பை நெருங்கினான், அது ஊன் உணவின்றிச் சுருண்டு கிடந்தது உடனே அவன் பாம்பை எடுத்துக் கொண்டு வீடு திரும்பி அதற்குப் பால் வார்த்தான்! அதைப் பட்சமாக வீட்டிலேயே வளர்ப்பதென்று முடிவுசெய்தான்.

இதை வீட்டில் உள்ளவர்களும் ஊராரும் விரும்பவில்லை. ஆயினும் குடியானவன், ''அன்புடன் மட்டும் நாம் பாம்பை வளர்ப்போமானால், அது நமக்கு ஒரு தீங்கும் செய்யாது'' என்று கூறிப் பிடிவாதமாய்ப் பாம்பை வளர்க்கத் தலைப்பட்டான்.

குடியானவன் தினந்தோறும் தரும் பாலையும் பழத்தையும் உண்டு, பாம்பு பருத்தது சிலநாள் வரை அது தனது இயற்கைக் குணத்தைக் காட்டாமலே வீட்டில் இங்குமங்கும் உலவி வந்தது. இதைக் கண்ட வீட்டாரும் பிறரும் 'பாம்பு நல்ல பிராணியாகவே இருக்கலாம்! உண்மை நமக்கென்ன தெரியும்!' என்று கருதிப் பேசாதிருந்தனர்.

ஒரு சமயம் குடியானவன் திடீர் என்று வெளியூர் செல்ல நேர்ந்தது. அவன் வீட்டில் இல்லாததால், வேளா வேளைக்குப் பாம்புக்குப் பால் வார்ப்பது தடைப்பட்டது. உடனே பாம்புக்கு சீற்றம் வந்தது. அது அறைக்குள் நுழைந்து குடியானவன் மகன் மீது சீறி, அவனைக் கடிக்கப் போயிற்று.

அதைக் கண்டு பையன் அலறினான்; பாம்போ, அவனை விடாமல் துரத்த ஆரம்பித்தது.

ஊர் திரும்பிய குடியானவன் நல்ல வேளையாக அதே சமயம் அறைக்குள் நுழைந்தான்; பாம்பின் பொல்லாக் குணத்தைக்கண்டு அவன் வெகுண்டு, அங்கிருந்த கோடரியால் அதை அப்போதே வெட்டிக் கொன்றான்

ந. சாந்தகௌரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவாக்கிய உத்தம புலவர் பற்றி உருக்கமாக உள்ளன்போடு உரை

யாழ்ப்பாணத்தில் கற்றவர்களும் மற்றவர்களும் விரும்பிக் கூடிய கலாநிலையத்தில் காலந்தோறும் பெரும் புலவர்களின் படத்திறப்பு விழாக்கள் கோலாகலமாக நடைபெறுதல் பெருவழக்கமாயிருந்தது.

சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்

அன்று 23 2 1933ஆம் நாளில் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அவர்களின் உருவப்படம் வணக்கத்துக்குரிய கலாநிதி ஐசாக் தம்பையா அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. அதனைத் தொடர்ந்து வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் கலாநிலையத் தலைவர் நடேச பிள்ளை அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பண்டிதமணி அவர்கள் தம்மை உருவாக்கிய உத்தமப் புலவர் அவர்களைப் பற்றி உள்ளன்போடு உருக்கமாகப் பேசினார்கள்.

புலவர் ஐயா அவர்களின் வாழ்க்கையையும் நூலாசிரியத் தகைமையையும், அவரின் மொழி பெயர்ப்புத் திறமைக்கான வடமொழி தென்மொழி அறிவையும் உரைகாணும் ஆற்றலையும் கண்டனம் தீட்டும் வல்லமையையும் இன்ன பிற இயல்பாற்றல்களையும் பற்றிப் பேசினார்கள்.

புலவர் ஐயா பல நூல்களைப் பிழையறப் பதிப்பித்த பெருமையையும் மாணாக்கர் பலர்க்கு எதனையும் மறைக்காது பாடஞ் சொன்ன பரோபகாரத் தன்மையையும் புலமையாளருக்குப் பலவற்றுளும் பெருவகையோடு உபகரித்த வள்ளல் தன்மையையும் இலங்கையிலும் இந்தியாவிலும் மகாவித்துவானாய் விளங்கிய மையையும் விளக்கி இலக்கிய உரைவிருந்து அளித்தார்.

சிலர் புலவர் ஐயா பழைய முறையிற் கற்றவர் எனக் கூறிய போதிலும், அவர்கள் சுருங்கக் கூறல் முதலிய அழகுகள் பொருந்த இயற்றிய இலக்கணம், சந்திரிகை, பெயர்ப்பகுபதவிளக்கம், வினைப்பகுபத விளக்கம் என்னும் நூல்கள் அவரின் இருமொழிப் புலமையை ஒருங்கு காட்டுவதுடன் அவர் செய்த சொல்லாராய்ச்சி நெறியானது ஆங்கில மொழி வல்லார் இக்காலத்தில் செய்துவரும் ஆராய்வுகளினும் மேலானது என்றார்.

மதிப்பு நிலவியது

இவ்வாறுக் கலாநிலையத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை, த கைலாச பிள்ளை ஆகியோரின் உருவப் படங்கள் திரைநீக்கம் செய்ய பெற்றபோதெல்லாம் பண்டிதமணி அவர்கள் அப்பெரியார்களைப்பற்றி அரிய ஆராய்வுப் பேருரைகளை நிகழ்த்தி அவையோரை வெகுவாக மகிழ்வித்து வந்தார். பண்டிதமணி அவர்களின் பேச்சுக்குப் பெரியவர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மத்தியில் பெருமதிப்பு நிலவியது.

இப்படியும் தமிழில் இலக்கிய விமர்சனம் செய்யலாம் என்பதைப் பலர் பயின்று பின்பற்றிப் பேசமுற்பட்டார்கள்.

பண்டிதமணி அவர்களின் பிரசங்கங்களைப் பெரிதும் நயந்த கலாநிலையத்தார் இவரைக் கொண்டு அடிக்கடி பேசுவித்துக் கேட்டு மகிழ்ந்தனர். பண்டிதமணி அவர்கள் பள்ளு பிரபந்தம், சின்னத்தம்பிப்புலவர் முதலான தலைப்புக்களில் பேசியவை தெவிட்டாத இலக்கிய விருந்தாகவே தொடர்ந்து நிலவி வந்தன.

பள்ளுப்பிரபந்தத்திலே சாதாரண மருதநில வாழ்வை அனுபவத்தில் நன்கறிந்த பண்டிதமணி அவர்கள் பள்ளுப்பாடல்களுக்கு மேலும் மெருகூட்டிப் பேசியமை சுவைஞர்களை மெய்மறக்கச் செய்தது. பள்ளுப் பாத்திரங்களாகத் தம்மையே மாற்றி நின்றுகுரலை மாற்றிப் பேசுதல் அவருக்குக் கைவந்த கலையாயிற்று.

சைவாசிரிய கலாசாலையில் பண்டிதமணி அவர்கள் நெருக்கமாக அச்சத்தோடும் அன்போடும் அடலாமல் அணுகாமல் பழகிவந்த உப அதிபர் பொன். கைலாசபதி அவர்கள், பண்டிதமணி அவர்களின் வேண்டுகோளை மறுக்கமுடியாமல் இடையிடை கலாநிலையத்துக்கு உடன் சென்று அங்கே எவரும் அணுகாமலிருந்த இந்து தருக்க சாத்திரவரலாறு, இந்துதருக்க சாத்திரக் கொள்கை என்பனபற்றி அருமையாகப் பேசிவந்தார்கள். இவை சம்பந்தமான கட்டுரைகளும் கலாநிலைய வெளியீடாய ஞாயிறு மலரில் எழுதி வந்தார்கள்.

இவர்களையன்றி முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் தாம் அதின் முயன்று ஆராய்ந்த யாழ்ப்பாணச் சரித்திர ஆய்வுகளைப் பற்றியும் பேசி வந்தார். அவருடைய கட்டுரைகள் ஞாயிறு வெளியீட்டில் இடம்பெற்று வந்தன.

பேசப் பழகிய இடம்

கலாநிலையத்தைப் பற்றிப் பண்டிதமணி அவர்கள் பிற்காலத்தில் குறிப்பிடும் போதெல்லாம் அது தாம் பேசப்பழகிய இடம் என்று புன்முறுவலோடு கூறுதல் வழக்கம். உண்மையில் இவருடைய பேச்சுக்கு அங்கே தனி மதிப்பும் வரவேற்பும் நிலவின என்று கலாநிலையத்தின் ஆண்டறிக்கைகள் அருமையாகக் கூறிப்பாராட்டுகின்றன.

பண்டிதமணி அவர்கள் தாம் கலாநிலையத்தோடு தொடர்புகொண்டிருந்த காலத்தில் அங்கே பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், தலைவர் நடேசபிள்ளை, பாகவதர் எல் எஸ். சாமுவேல், தாவுத் ஷா பகதூர், பொன்னையா பிள்ளை, விபுலானந்த அடிகள், கௌரவ அக்பார், கே. பி. எஸ். மெனன், வணக்கத்துக்குரிய பிக்னெல் முதலானோர் பல துறைகள் பற்றிப் பேசிய வரலாறுகளைக் கூறுதல் வழக்கம்.

இவர் அங்கே சில வேளைகளில் கூறியனவாயுள்ள குறிப்புரைகளும் பெருவிருந்தாக இருந்தனவாக அறிக்கைகள் கூறுகின்றன.

கலாநிலையத்தில் அடிக்கடி கூடிக் கருத்துப் பரிமாறிய கற்றவர் கூட்டத்திலே பண்டிதமணி அவர்களுக்குத் தனி மதிப்பு இருந்தது. அது இவர் உள்ளூர்ப் புலவர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள் என்பதற் சிறந்தோர்களைப் பற்றி

(8ஆம் பக்கம் பார்க்க)

### பண்டிதமணி காலமும் வரலாறும்

க. சி. குலரத்தினம்

## வெள்ளித் திரை

# சிவாஜியுடன் நடிக்க இவருக்கு ஆசையாம்!

நடிகர் திலகம் சிவாஜி கணேசனைச் சந்திக்க வேண்டும், அவருடன் சேர்ந்து ஒரு தமிழ்ப் படத்தில் நடிக்க வேண்டும்.

இது பிரபல நடிகர் ஒருவரின் ஆசை.

யார் அந்த பிரபல நடிகர்? மலையாளப் படவுலகின் சுப்பர் ஸ்டார் மம்முட்டிதான் அவர். அவர் சொல்கிறார்.



நான் நிறைய தமிழ்ப் படங்கள் பார்த்துள்ளேன். எம். ஜி. ஆர். படங்கள் என்றால் விரும்பிப் பார்ப்பேன்.

எம். ஜி. ஆரின் பரம விசிறிகளில் நானும் ஒருவன். அவரை ஒருமுறை கொச்சியில் நடந்த விழா ஒன்றில் சந்தித்தேன்.

பெரு மதிப்புக்குரிய அவரைச் சந்தித்த எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு சம்பவமாகும்.

## ஆணழகனாக நடிகர் ஸ்ரீநிவாஸ்

"உயர்ந்த உள்ளம்" படத்தின் மூலம் தமிழ்ப் படவுலகுக்கு அறிமுகமாகிய ஸ்ரீநிவாஸ் ஒரு பட்டதாரி

இதுவரை பத்துப் படங்களில் நடித்து விட்ட இவர், தமிழ் நாட்டில் சிறந்த ஆணழகனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

## இந்தியில் நதியா

"பூவே பூச்சூடவா" படம் இந்தியில் உருவாகப் போகிறது. இந்தப் படத்தில் நதியா கதாநாயகியாக நடிப்பார்

நதியா இதுவரை ஏழு மலையாளப் படங்களிலும், ஏழு தெலுங்குப் படங்களிலும் நடித்து விட்டார்.

## பொலீஸ்காரர் வேடத்தில் நடிக்கிறார் சத்தியராஜ்

மணிவண்ணனின் கலைக்கோயில் தயாரிக்கும் 'இனி ஒரு சுதந்திரம்' படத்தில் பொலிஸ்காரர் வேடத்தில் நடிக்கிறார் சத்தியராஜ்

இந்தப் படத்தில் மற்றும் சிவகுமார், ரேகா, விஜு சக்கரவர்த்தி, நளினி, ஜீவிதா, செந்தில், பாண்டியன், சந்திரசேகர், ஜனகராஜ், காந்திமதி, சிவசந்திரன் ஆகியோர் நடிக்கிறார்கள்

சபாபதி ஒளிப்பதிவில் மணிவண்ணன் டைரக்ட் செய்கிறார்.

மக்களோடு ஒன்றியுள்ள சமுதாயப் பிரச்சினையைப் புதியகோணத்தில் இப்படத்தின் மூலம் அளிக்கிறார் டைரக்டர் மணிவண்ணன்.

இப்படத்தில் வித்தியாசமான வேடத்தில் நடிக்கிறார் சிவகுமார்.

# பேத்தியை நினைத்து கண்ணீர் சிந்தினார் நடிகர் திலகம்

தவசி வீட்டுக்குள் புகுந்ததும், "தாத்தா! தாத்தா!!" என அன்புடன் ஓடி வந்தாள் பேத்தி சின்னத்தாயி.

"இந்தப் பொட்டலத்தில் என்ன, என்ன பட்சணங்கள் உள்ளன?" என்று தவசி கேட்டார்.

"திருநெல்வேலி அல்வா, கடம்பூர் போளி, மணப்பாறை முறுக்கு இருக்கே" என்று பளிச்சென சொன்னாள் சின்னத்தாயி.

அத்துடன் "தாத்தா! எனக்கு சின்னாளப்பட்டி சேலை வாங்கி வராதது ஏன்? என்று சின்னத்தாயி கேட்கவும் கண்ணீர் சிந்தினார், தவசி.

தனது பேத்தி இளம் வயதிலேயே விதவை ஆகிவிட்டாளே! அவளுக்கு சின்னாளப்பட்டி சேலை எப்படி வாங்கி வருவது என்ற கவலை நெஞ்சை அடைக்கிறது.

தவசியாக நடிகர் திலகம் சிவாஜிகணேசனும் சின்னத்தாயி ஆக புதுமுகம் வாணியும் நடிக்தனர்.

இந்தக் காட்சி ஏ. வி. எம் படப்பிடிப்பு நிலையத்தில் மதர்லேண்ட் பிக்சர்ஸின் பிரமாண்டமான தயாரிப்பான 'மண்ணுக்குள் வைரம்' என்ற படத்தில் இடம் பெறுகிறது.

ராஜேஷ், பாண்டியன், முரளி, கோவை சரளா, காந்திமதி மற்றும் பலரும் நடிக்கிறார்கள்.

தேவேந்திரன் இசை அமைக்க, செல்வராஜ் ஒளிப்பதிவைக் கவனிக்க, கோவை தம்பியின் மகன் மோகன் துரை தயாரிக்கிறார்.

# ராஜேந்தரின் பெருந்தன்மையை பாராட்டுகிறார் இயக்குநர் அழகப்பன்

'மைதிலி என்னைக் காதலி'யின் வெற்றியில் எனக்குப் பங்குண்டு ஆனால் 'பூக்களைப் பறிக்காதீர்கள்' பட வெற்றியில் எனக்குப் பங்கில்லை என ராஜேந்தர் கூறியுள்ளது அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது

இவ்வாறு கூறியவர் பூக்களைப் பறிக்காதீர்கள் பட இயக்குனர் வேந்தன்பட்டி அழகப்பன்.

அவர் ராஜேந்தர் பற்றி மேலும் கூறுகையில்

பூக்களைப் பறிக்காதீர்கள் பட வெற்றிக்கு கதை — திரைக்கதை எவ்வாறு உதவியதோ, பாடல்களும் அவ்வாறு உதவின

ராஜேந்தர், இளையராஜாவிற்கு இணையான இசையமைப்பாளர்.

அவரது இசையில் பூக்களைப் பறிக்காதீர்கள் படப்பாடல்கள் அனைத்தும் பெரும் வரவேற்பைப் பெற்றன.

அடுத்து நான் இயக்கவுள்ள இரு படங்களுக்கும் ராஜேந்தரே இசையமைக்கவுள்ளார்.

இவ்வாறு வேந்தன்பட்டி அழகப்பன் கூறினார்.

# தமிழ்ப் படவுலகில் ஈழப் பாடகர் அறிமுகம்

யாழ்ப்பாண இளைஞரான திரு. மகேஸ்வரன் தமிழ்ப்படவுலகில் பாடகராக அறிமுகமாகிறார்.

"யாழ்ப்பாண வாலிபர்களே" என்ற பாடல் மூலமே அவர் படவுலகில் அறிமுகமாகிறார்

பிரபல நடிகர் விஜயகாந் நடிக்கும் "தெற்குத் தெருவிலே" தமிழ்ப் படத்தில் இப்பாடல் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் அப்படம் வெளிவர இருப்பதாகவும் திரு. மகேஸ்வரன் தெரிவித்தார்

'யாழ்ப்பாணத்து வாலிபர்களே' பாடல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படுவதற்காக 977 இல் பதிவு செய்யப்பட்ட பின்னர் தடைவிதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

வட்டுக்கோட்டைவாசியான திரு. மகேஸ்வரன் தமிழ் நாட்டில் பாளையங்கோட்டைப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

### தயாரிப்பு: பேரின்பம்

## ஞானசஞ்சீவி---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வைதம்' என்னும் தத்துவத்தைக் கூறினார்.

இத்தத்துவத்தின்படி இறைவன் ஒருவரே இருக்கிறார். அவருடைய உடலாக இருப்பது ஜகம். சூரியனிடமிருந்து கிரணங்கள் புறப்படுவது போல் உயிர்களெல்லாம் இறைவனின் உடலிலிருந்து தோன்றுகின்றன

ஜீவன் தன்னை இறைவனிடம் அடைக்கலமென ஒப்படைத்து, அவருடைய உடலின் ஒரு நுண்ணியபகுதி என்று தன்னை உணர்ந்திருப்பது தான் முக்திநிலை என்று விளம்புகிறது 'விசிஷ்டாத்வைதம்".

'துவைத' தத்துவத்தின்படி ஜகம், ஜீவர்கள், பரம்பொருள் ஆகிய மூன்றும் அநாதியானவைகள். அவைகளுக்கு ஆதியும் இல்லை. அந்தமும் இல்லை பரம்பொருள் ஜகத்தையும் ஜீவர்களையும் ஆளுகின்றார்

ஜீவனானது பரம்பொருளின் கருணையால் ஜகத்திலிருந்து விடுதலையடைந்து பரம்பொருளுக்குத் தொண்டனாய் ஆட்படுவது தான் முக்திநிலை

இறைவனின் சமுகத்திலிருப்பதுதான் முக்தி முக்தியடைந்த நிலையிலும் ஜீவனுடைய தனித்துவம் இழக்கப்படுவதில்லை

இத்தத்துவம் கி பி 13ஆம் நூற்றாண்டில் கன்னடத்தில் பிறந்த மாதவாச்சாரியாரால் எடுத்துரைக்கப்பட்டது. ✶

## அன்பிற்கு..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உழைத்து சுயமாக வாழத் தெரிந்து கொள்ள வேண்டியது பெண்ணுக்கு மிக மிக அவசியம்

ஆண்களுடன் நல்ல முறையில் பழகுவதில் தவறு எதுவும் இல்லையே! அவளுடன் வேலை செய்பவரும், வேறு ஒரு பெண்ணின் கணவர் - சகோதரர் - தந்தை.

எனது எழுத்துத் துறையிலும், வைத்தியத் துறையிலும் நான் பழகிய மனிதர்கள், சிறந்த நண்பர்களாக இருக்கிறார்கள்.

கடைசியாக, எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் மனம் சோர்ந்து போகாமல், துணிவுடன் வாழப் பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

'பிறர் சொல்வார்களே' என்று அனாவசியமான பயங்களுக்கு இடம் கொடாமல், மனச்சாட்சிக்குப் பயந்து நடக்கக் கற்றுக் கொள்வது மிக அவசியம் பிறரது குற்றச்சாட்டுக்கள் அப்போது நம்மை அசைக்க முடியாது.

சமூகத்தில் விழிப்புணர்வோடும், தன்னம்பிக்கையோடும் சுயமாக வாழ்பவள்தான் புதுமைப்பெண். மற்றவர்கை கொடுத்துத் தூக்கி நிறுத்த வேண்டியவள் அல்ல என்பதை உணர வேண்டும்

அப்போது தான் 'மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்ற வாக்கு பலித்திடும். ✶

## அவசர சேவைகள் கூட ஸ்தம்பித...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவ உண்மையைக் கூறினார் அந்த விவசாயி

டாக்டர்களுக்கும் சிக்கல்

தனியார் வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் தமது கருத்தைக் கூறுகையில் -

மக்கள் இன்று ஷெல் அடிக்கு பயந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அதிகம் செல்வதில்லை. தனியார் மருத்துவ மனைகளிலேயே சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

பல வைத்தியர்கள் ஒரே நாளில் பல மருத்துவ மனைகளில் நோயாளிகளை பார்வையிடச் செல்ல வேண்டியுள்ளது. எரிபொருள் இன்றி அவர்கள் தமது வாகனத்தில் செல்லாது சைக்கிளில் பஸ்ஸில் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் அவர்கள் பெரிதும் களைப்படைகின்றார்கள். அறுவைச் சிகிச்சைகளை உரிய முறையில், செய்ய அவர்களால் முடிவதில்லை.

மின்சாரம் நிற்கின்ற போது எரிபொருள் இல்லாததால், ஜெனரேட்டர் மூலமாவது அவசர சிகிச்சைகளுக்கு மின்சாரம் பெற முடிவதில்லை...

அம்புலன்ஸ் சேவையும் இல்லை ... இதனால் பட்டணத்திலுள்ள நோயாளிகளைக் கூட அம்புலன்ஸில் கொண்டுசெல்ல முடியாத அவல நிலையில் உள்ளனர். வைத்தியசாலையினர்

மந்திகைக்கு போவதற்கு மகரகமவுக்கு போகும் பட்டணம் காருக்கு நோயாளிகள் கொடுக்க வேண்டியுள்ளது. என்றார் அவர்.

ஒரு நடுத்தர வர்க்கத்து அரச நிர்வாக உத்தியோகஸ்தர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்—

அரசின் எரிபொருள் கட்டுப்பாட்டால் அதிகம் பாதிக்கப்பட்டவர் கள் நடுத்தர வர்க்கத்து ஊழியர்களே.


சகல தொழிலாளிகளும், வியாபாரிகளும் தமது உற்பத்தி விற்பனைப் பொருட்களை எரிபொருள் தட்டுப்பாட்டை காரணம் காட்டி விலை உயர்த்தி உள்ளனர். நாம் எதை உயர்த்துவது?

அரசின் படிப்படியான கெடுபிடிகளால் எமக்கு மூக்கிற்கு மேல் வெள்ளம் வந்த நிலையில் உள்ளோம் இனி இதற்கு மேல் தலையை உயர்த்த எம்மால் முடியாது.

- இவ்வாறு நடுத்தர வர்க்கத்தினர் படும் துயரை எடுத்துரைத்தார் அவர். ✶

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 51



அனுப்புபவர் பெயர்:

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ..................

..................

வயது: ..................

விலாசம் ..................

..................

ஒப்பம் ..................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

சொற்சிலம்பம் போட்டி இல. 51

**இடமிருந்து வலம்**

1 வீட்டுக் கொரு லக்ஷ்மி என இதனைச் சொல்வர்
6. உத்தரவிடுபவர்
8. மீன்பிடி உபகரணங்களுள் இது மிகவும் பிரபலமானது
11. விதம்
12. உலகத்தின் முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் இல்லை
13 பருகு
14. அன்னை
16. மூன்று அடி சேர்ந்தால் இது வரும்
17. வயதில் பெரியோரின் இதனைக் கேட்டால்தான் சிறியோர் கருமங்களைச் சரியாகச் செய்ய முடியும்
19 கொடைக்குப் பெயர் பெற்ற மன்னன்
20. சருமவியாதி
21. சிதம்பரம்
22. பாடல்

**மேலிருந்து கீழ்**

1 பறவை
2. உறவினர்
3. வாதாடுபவர்
4. சித்திரம் வரைய உதவும்
6. இது ஒப்பதில்லை
7. நேர்த்திக் கடனுக்காக சைவாலயங்களில் இதனை எடுப்பார்கள்
9 பாய்
10 இடைத்தரகரிய சடங்கு
13 கர்ணனின் தாய்
14. புத்தரின் தாய்
15. அரண்
18. செருக்கு
19. வரண்ட பூமி

### சொற்சிலம்பம் இல. 49 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. புதுவருடம் 2. துணிகை, 7 சோலை 8 அபிமானி, 9. கபட 11 யாக, 13 விடை 14 பமதை, 17 பலகாரி, 18. கடம் 19. பத 21. மிதிலை, 21 பம்குவ (பருவம்),

**மேலிருந்து கீழ்**

1. புதுக்கவிதை, 2. துணி, 3 வகை 4. டப்பி, 5 கொலை, 7. சோனியா, 8 அம்மனம், 10. படை, 12 கடமை, 13. விதை 14. மணம். 15 மகா, 16. தைரியம், 17. படலை 18. கதி, 20. குரு.

### சொற்சிலம்பம் இல. 49 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு;- செல்வி. தங்கலக்சுமி நாகரத்தினம், சந்தை தெற்கு வீதி, சுன்னாகம்.

இரண்டாம் பரிசு:- செல்வன். அரசகுலசேகரன், உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், உடுவில், சுன்னாகம்.

மூன்றாம் பரிசு;- செல்வி. க. தனுஷா, 26B, மன்னார் வீதி, வவுனியா.

✶ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம்அனுப்பி வைக்கப்படும் நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரியல் தொழில் நுட்பத் துறையின் மூலம் பொருளாதாரத் துறையில் புதிய சகாப்தம்

## யாழ். பல்கலைக்கழகம் முயற்சி

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் உயிரியல் இரசாயனப் பிரிவில் உயிரியல் தொழில் நுட்பத்திற்கான எம்.எஸ்ஸி பாடநெறி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது அதை யொட்டி இக் கட்டுரை இண்டு பிரசுரமாகுகின்றது.

எமது பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தித் துறையில் உயிரியல் தொழில் நுட்பக் கல்வி புதிய சகாப்தம் ஒன்றைப் படைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

வளர்ந்த நாடுகளின் வளர்ச்சியில் இத்துறை சேர்ந்த கல்வி, பெரும் பங்கு வகித்தது குறிப்பிடத்தக்கது.

— ஆசிரியர்

இலங்கையின் பல்வேறு இடங்களிலும் பல்கலைக் கழகங்களை அமைப்பதன் நோக்கங்களில் ஒன்று அவ்விடங்களில் பெருமளவில் காணப்படும் இயற்கை வளங்களை உபயோகிப்பதாகும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள இயற்கை வளங்களைப் பொறுத்தவரை முக்கியமான தாவர வகைகள், பல்வேறு கிழங்கு வகைகள், பணப் பயிர்களான வெங்காயம், மிளகாய், பனம் உற்பத்திப் பொருள்கள், கடலில் காணப்படும் மீன்கள், முத்துக்கள், கறி உப்பு, சுண்ணாம்புக்கல் என்பனவாகும்.

துரித மகாவலித் திட்டத்தினால் இலங்கை விரைவில் நெல்லுற்பத்தியில் தன்னிறைவு பெறுவதோடு, சோளம், மரவள்ளி வெங்காயம், மிளகாய் என்பவற்றையும் அதிகளவு உற்பத்தி செய்யும்.

இதனால் தெற்கிலுள்ளவர்களின் வெங்காயம், மிளகாய் தேவை குறைவப்போகிறது இதை நிவர்த்தி செய்ய எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை.

### பல்கலைக்கழக செயற்பாடு

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்கள் யாவும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உட்பட, பட்டப் படிப்பிலீடுபடும் மாணவர்களைப் பட்டதாரிகளாக்குவதிலேயே மனநிறைவையும், பெருமையையும் அடைகின்றன.

எதிர் காலத்திலாவது இப்பல்கலைக் கழகங்கள் தம்மை நாட்டுக்குத் தேவையான, தொடர்புடைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் இடங்களாக மாற்றிக்கொள்ள முன்வர வேண்டும்.

வெளி நாடுகளிலிருந்து அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு பொருள்களை வாங்குவதை நிறுத்தி எம் நாட்டிலுள்ள நில வளங்களைக் கொண்டு நாமே இப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

உயிரியல் தொழில் நுட்பத்தை வெற்றிகரமாக செயற்படுத்தினால் அது எமது அந்நிய செலாவணி மிகுதிப்பாட்டிற்கும் புதிய தொழில் வாய்ப்பிற்கும் சிறந்த வழியை வகுக்கும்.

இக்கூற்று வளர்ந்த நாடுகளிற்கும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளிற்கும் சாலப் பொருத்தமானது.

இந்த அடிப்படையில் இக் கல்வி யாழ் பல்கலைக்கழகத்திலும் ஆரம்பிக்கப்படுகிறது

இன்று இங்கிலாந்தில் 30இற்கு மேற்பட்ட உயிரியல் தொழில் நுட்பத்தை மையமாகக் கொண்ட கூட்டுத்தாபனங்களும், அமெரிக்காவில் இருநூறுக்கும் மேற்பட்ட உயிரியல் தொழில் நுட்பத்தை மையமாகக் கொண்ட நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

உயிரியல் தொழில் நுட்பமானது இருபெரும் பிரிவுகளை உள்ளடக்கி உள்ளது அவையாவன, பிறப்புரிமைப் பொறியியல், நொதியப் பொறியியல் என்பனவாகும்.

நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் இன்சுலின் மனிதரிலிருந்து பெறப்படாமல் இதுவரை காலமும் மாட்டிலிருந்தே பெறப்பட்டது. மனித உடல் வேற்றுப் பொருள்களை ஏற்றுக் கொள்ளாது. இது காரணமாக மாட்டிலிருந்து பெறப்படும் இன்சுலினை நீரிழிவு நோயாளிக்கு கொடுப்பதால் பல மருத்துவப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இப்பிரச்சினைகள் பிறப்புரிமைப் பொறியியல் மூலம் இன்று நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. பற்றீரியா இன்சுலினை உற்பத்தி செய்யமாட்டாது ஆனால், பிறப்புரிமைப் பொறியியல் மூலம் இன்சுலின் உற்பத்தி செய்யும் நிரமூர்த்தம் பொருத்தப்பட்ட பற்றீரியா இந்த இன்சுலினை உற்பத்தி செய்யக் கூடியது.

இந்த இன்சுலின் இப்பொழுது வர்த்தக ரீதியில் ஏராளமாகக் கிடைப்பதால் நீரிழிவு நோயாளிக்கு இது வழங்கப்படுகிறது.

பிறப்புரிமைப் பொறியியல் நுண் அறுவையை (Micro Surgery) உள்ளடக்கியது. இன்சுலின் ஓமோன் சுரப்பதற்கு காரணமான நிரமூர்த்தம் (Endonuclease) என்னும் நொதியத்தால் வெட்டப்பட்டு அது பற்றீரியாவினுள் புகுத்தப்படுகின்றது. இவ்வாறு பிறப்புரிமையியல் மூலம் உருவாக்கப்பட்ட பற்றீரியா மனிதருக்குத் தேவையான இன்சுலினை உற்பத்தி செய்கின்றது

### புதியரக நெல்

நைதரசன் பசளைக்குப் பதிலாக நெல் தாவரத்தில், வளிமண்டலத்தில் உள்ள நைதரசனை தாவரத்தில் பதிக்கக் கூடிய நிறமூர்த்தத்தை உட்புகுத்தும் செயலில் ஜப்பான் ஓரளவு வெற்றிகண்டிருக்கிறது.

இந்த அற்புதமான நெல் தாவரங்களிற்கு பசளையோ பூச்சி நாசினிகளோ தேவைப்படுவதில்லை.

இவ்வாறு பிறப்புரிமைப் பொறியியலால் உருவாக்கப்பட்ட தாவரங்களை உபயோகிப்பதால் வளர்ந்த நாடுகள் வளர்முக நாடுகளை விட மிகக் குறைந்த செலவில் தானியங்களையும் மரக்கறி வகைகளையும், பழ வகைகளையும் உற்பத்தி செய்யும் நிலையில் உள்ளன.

### சோளத்திலிருந்து சீனி

நொதியப் பொறியியல் நொதியங்களால் அல்லது நொதியங்களைக் கொண்டுள்ள கலங்களின் உதவியால் சேதனச் சேர்வைகளை தொகுப்பதற்கும், பகுப்பாய்வு உபயோகங்களிற்கும், மருத்துவ சிகிச்சைக்கும், உயிரிரசாயன மாக நீக்கலிற்கும் உபயோகிக்கப் படுகின்றது

சோளத்திலிருந்து உயர் செறிவுடைய பிரக்ரோஸ் பாகு நொதியப் பொறியியல் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

அமெரிக்கா மட்டும் ஐந்து கோடி தொன் உயர் செறிவுடைய பிரக்ரோஸ் பாகு உற்பத்தி செய்கின்றது

இதைவிட ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் பல கோடி தொன் உயர் செறிவுடைய பிரக்ரோஸ் பாகு உற்பத்தி செய்கின்றன.

உயர் செறிவுடைய பிரக்ரோஸ் பாகு சீனிக்குப் பதிலாக உபயோகிக்கப்படுகின்றது உலகச் சந்தையில் சீனியின் விலை வீழ்ச்சியடைந்ததன் காரணம் இப் பிரக்ரோஸ்பாகின் உற்பத்தி அதிகரித்ததாலாக இருக்கலாம்.

இதேபோன்று வளர்ந்த நாடுகள் வளர்முக நாடுகளைவிட குறைந்த செலவில் தானியங்களை உற்பத்தி செய்வதால் வளர்முக நாடுகள் தமது விளைச்சலை உற்பத்திச் செலவுக்குக்கூட விற்க முடியாத நிலை உருவாயிருக்கின்றது எமதுநாட்டிற்குப் பொருத்தமான பல உயிரியல் தொழில் நுட்ப ஆரம்ப ஆராய்ச்சிகளும், பிரயோக ஆராய்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



### பனையிலிருந்து சீனி, மது சாரம்

எமது பிரதேசத்தில் மட்டும் ஒரு கோடி பனை மரங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 50% மானவை பெண் பனைகளாகும்.

ஒவ்வொரு பனையும் சராசரியாக 25பழங்களை ஒரு வருடத்திற்குத் தருமாயின், ஒரு வருடத்தில் 25 ஆயிரம் மெற்றிக் தொன் பனம் பழப் பாகை நாம் பெறலாம்.

பனம் பாகில் சீனிச் செறிவு 15 வீத மாகும். இதிலிருந்து ஆகக் குறைந்தது 5வீத மதுசாரம் பெறலாம்.

மூன்று மனிதர்கள் ஒரு மணி நேரத்தில் செய்யும் வேலையை பத்து நிமிடத்தில் செய்யக் கூடிய மின்சாரத்தால் இயங்கும் பிழி சாதனம் ஒன்றை யாழ் பல்கலைக்கழக உயிரியல் தொழில் நுட்பப் பிரிவு உருவாக்கியுள்ளது.

இதனால் பனம் பாகு பிழியும் செலவு நூறு மடங்கால் குறைக்கப்படுவது மட்டுமல்லாமல் பெறப்படும் பாகு சுகாதார மானதாகவும், நோய் விளைவிக்கக் கூடிய அங்கிகளோ அல்லது வேறு உயிரங்கிகளோ குறைந்ததாகவும் இருக்கும்.

இத்தன்மை பழம்பாகு பழுதடையாமலிருக்கும் காலத்தைக் கூட்ட வல்லது.

இப்பனம் பாகிலுள்ள சுக்குரோசை பெருமளவில் மதுசாரமாக மாற்றும் மாதிரி செய்முறைகள் நடத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் பெற்றோலியப் பொருள்கள் காணப்படுவதில்லை. நாம் 1981ல் எமது அந்நிய செலாவணியில் 57வீதத்தை இப் பொருள்களின் இறக்குமதிக்காக செலவளித்துள்ளோம்.

மதுசாரத்தை பெற்றோலிற்குப் பதிலாக உபயோகிப்பதே இதற்கு மாற்றாகும்.

ஜப்பான் 2000 ஆண்டளவில் மரக்கறி கழிவுகளிலிருந்து மது சாரத்தை உற்பத்தி செய்து, வாகனங்களை ஓட்டுவதற்கும், வீடுகளில் விளக்கெரிப்பதற்கும் தேவையான சக்தியைப் பெற உத்தேசித்துள்ளது.

### திரவ குளுக்கோஸ்

நொதியப் பொறியியல் மூலம் தானியங்களில் உள்ள மாப்பொருளையும், கிழங்கு வகைகளிலுள்ள மாப்பொருளையும் திரவ குளுக்கோஸாக மாற்றும் ஆராய்ச்சிகள் எமது பரிசோதனைக் கூடத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

உயிரியல் தொழில் நுட்ப கைத்தொழில்களிற்கும் இனிப்பு பண்டங்கள் தயாரிக்கும் கைத்தொழில்களிற்கும் திரவ (8-ஆம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம்
(மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்)

# மக்கள் மகிமை

## உளவியல் உணர்ந்த சுந்தர பாஸ்கரி

எமது வாழ்க்கையில் பல ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் சந்திக்கிறோம். இவர்களில் அநேகர் எமது போதனை ஆற்றலின் மூலமாக எமக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கிறார்கள்.

இப்படிப்பட்ட இலட்சிய விரிவுரையாளர்கள் வரிசையில் முன் நிற்பவர்களில் திருமதி சுந்தர பாஸ்கரி—செல்வத்துரையும் ஒருவராவர்.

1926ஆம் ஆண்டு ஒக்டோபர்மாதம் 13-ஆம் திகதி புலோலியில் பிறந்த இவர், ஆங்கில உதவி ஆசிரியராக திருகோணமலையில்சண்முகம் வித்தியாலயத்தில் கடமை ஆற்றிவிட்டு 1950ல் இந்தியாவுக்குச் சென்று, சென்னைச் சர்வ கலாசாலையில் பட்டப் படிப்பை முடித்தார்.

பின்னர்தாயகம் திரும்பியதும் 1955இல் சைவாசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர் பதவியேற்றார். அங்கே பண்டிதமணி கணபதிப்பிள்ளை, உப அதிபர் கைலாசபிள்ளை ஆகிய இரு பெரியோர்களுடன் கடமையாற்றி, பின் அதே இடத்தில் உபஅதிபர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்,

1963ஆம்ஆண்டு கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பதவியை ஏற்றார்.

இங்கே கல்வி, உளவியல், ஆங்கிலம், அரசியல் ஆகிய பாடங்களுக்கு விரிவுரையாளராகத் துலங்கினார்.

இவர் உளவியல் வகுப்புக்கு வந்துவிட்டால் வகுப்பு ஒரு புதுக்களை கட்டிவிடும், உளவியல் சில இடங்களில் சிக்கலாகவும் புதிராகவும் அமைந்து மாணவர்களைத் தலையைச் சுற்ற வைப்பதும் உண்டு. ஆனால் திருமதி செல்வத்துரை கலகலப்பாக, தனக்கே உரித்தான கம்பீரத்துடன் தன் விரிவுரையைத் தொடங்கிவிட்டார் என்றால், பின் சுவாரஸ்யமான ஒரு தொடர்கதை கேட்கும் நிலைக்கு மாணவர்கள் வந்துவிடுவார்கள்.

சிக்கல்கள், புதிர்கள் எல்லாம் அவர் கலகலப்பாக விடயத்தை கையாண்டு செல்லும்போது மிக இலகுவாகிவிடும்.

உளவியலைக் கற்பிப்பதில் மாத்திரம் இவர் கைதேர்ந்தவர் என்பதல்ல. அதைத் தானே கையாண்டு பிறரை ஒரு கணத்தில் கணிக்கும் தன்மையும் பெற்றிருந்தார்.

இதுவே இவரின் தனித்துவம். அன்பு, அறிவு, அழகு எல்லாமே ஒன்றிணைந்த ஒரு கலைக்களஞ்சியமாக இருப்பவர் திருமதி செல்வத்துரை.

தனது 32 வருட ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள திருமதி செல்வத்துரை சிறந்த ஆசிரியருக்கு ஒரு நல்ல உதாரணம்.

சந்திரா பத்மபாலன்

# வதிவிடமே முக்கியமெனின் விடுதிச்சாலைகள் மிளிர்வதேன்?

யாழ்ப்பாணத்துக் கல்வி வானிலே யாழ் இந்துக் கல்லூரியும் யாழ் இந்து மகளிர் கல்லூரியும் சுடர் விடும் இரு கல்லூரிகள் ஆகும்.

இவை போக்குவரத்து இடவசதி போன்ற பல காரணிகளைக் கருத்திற் கொண்டே இவ் இடங்களில் அமைந்துள்ளன.

ஆகவே, இவற்றை தனியே ஒரு தொகுதியின் சொத்து என்று நாம் கருதாமல் முழுத் தமிழினத்தினதும் தேசிய சொத்தாக கருத வேண்டும். ஆகவே இவற்றில் மாணவர்களை அனுமதிக்கும்போது திறமைக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமே தவிர வேறு எந்த காரணிகளையும் கருத்திற் கொள்ளலாகாது இதுவே முறையாகும் அன்றி, வதிவிடத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது மனிதனின் அடிப்படை உரிமையை மீறுவது போலாகும்.

திறமையின் அடிப்படையில் மாணவரைத் தெரிவு செய்வதினால் பாடசாலையின் தரம் உயர்கின்றது. இங்கு சேரும் மாணவர் மேலும் முன்னேற வாய்ப்பு உண்டாகிறது.

சென்ற வாரம் ஆசிரியர் திரு. கார்த்திகேசு அவர்கள் வதிவிடத்திற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என வாதிட்டிருந்தார். வசதி குறைந்த இடத்தில் வசிக்கும் ஒரே காரணத்திற்காக திறமையுள்ள ஒரு மாணவன் ஒருவன் பின் தள்ளப்படுவதா? அது தரப்படுத்தல் கொள்கையை ஆதரிப்பதாக அல்லவா அமையும்.

மேலும், இப்பகுதி மாணவருக்கு தமது பகுதியிலுள்ள பாடசாலைகளில் 100 வீத அனுமதி கிடைப்பதில்லை; ஆனால் வேறு பகுதியில் 100 வீத அனுமதி கிடைக்கிறது எனக் குறிப்பிட்டிருந்தார். வேறு பகுதி மாணவருக்கு எந்த தரத்திலுள்ள பாடசாலைகளில் 100வீத அனுமதி கிடைக்கிறதோ அதே தரத்திலுள்ள பாடசாலைகள் இப்பகுதியிலும் உண்டு. அங்கு இவர்கட்கு 100 வீத அனுமதி கிடைக்கிறது என்பதை மறுக்க முடியாது.

இப்பகுதி மக்கள் இப் பாடசாலைகளை வளர்த்து கல்லூரிகளானமைக்கு உதவியது உண்மைதான். ஆனால் இக் கல்லூரிகளை ஏனையோர் போற்றுமளவுக்கு உயர்த்துவதற்கு முற்றிலும் இப்பகுதி மக்கள் தான் காரணமா?

இப்பாடசாலைகளில் காலங்காலமாக பிரகாசித்த மாணவர்களின் வதிவிடங்களை ஓரளவுக்காவது அறிந்திருந்தால், அதாவது இக் கல்லூரிகளுடன் நீண்டகால தொடர்பிருந்தால் இதை நன்கு உணரலாம்.

கல்லூரிகளுக்கு தொகுதி வாரியாக நிதி ஒதுக்கப்படுவது உண்மைதான். இக்கல்லூரிகள் தேசிய சொத்து ஆகவே இவற்றிற்கு அகில இலங்கை ரீதியில் நிதி ஒதுக்க வேண்டும் என வாதிடலாமே தவிர. தொகுதி வாரியாக நிதி ஒதுக்கப்படுவதால் இத் தொகுதி மக்களுக்கே இங்கு முதலிடம் வழங்குவதென்பது மிகவும் தவறானதாகும். மேலும் கடந்த காலங்களில் எல்லாம் இப்பாடசாலைகளில் வதிவிடத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டதென்றால் இப்பாடசாலைகளில் மிகவும் வசதியான விடுதிச்சாலைகள் (Hostels) இருப்பதன் காரணம் என்ன?

ம. குகரூபன்

## வசதிதான் முக்கியம்

கல்வியில், பாடசாலைகளுக்காக மாணவர்களிருக்கிறார்களா? மாணவர்களுக்காக பாடசாலைகளிருக்கிறதா? மாணவர் தொகை அதிகரிக்கும் என்பதற்காக மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு, தடை விதிக்கக் கூடாது பாடசாலை அனுமதிக்குப் பொறுப்பான கல்வித் திணைக்களம் ஒவ்வொரு மாணவனும் எங்கே படிக்கவேண்டுமென்பதைக் காட்டியே ஆகவேண்டும்.

அப்படி முடியாவிட்டால் அனுமதிப் பொறுப்பை அதிபர்களிடம் ஒப்படைத்துவிட்டு தாம் ஒதுங்கிக் கொள்வது நல்லதாயிருக்குமல்லவா?

வருட ஆரம்பத்தில் சில கல்லூரிகளில் மாணவரைச் சேர்ப்பதற்கு, பெற்றோர் குவிகின்றார்கள், போட்டியிடுகின்றார்கள். சில பாடசாலைகளில் சேர்ப்பதற்கு விரும்புகிறார்களில்லை. இந்நிலை ஏன் ஏற்படுகிறதென்பதை கல்வி நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்கள், கல்வி வளர்ச்சியில் ஆர்வமுடையவர்கள் கல்வி பயில வைக்கும் பெற்றோர்கள் இதுவரை சிந்தித்தார்களா?

அக் கஷ்டத்தை நீக்குவதற்கு மாற்றுவழி கண்டார்களா?

சில பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கு பலர் குவிவதற்கு பின்வருவன காரணமாக இருக்கலாம்.

க. பொ. த. சாதாரணம், உயர்தரம் ஆகிய பொதுப் பரீட்சையில் சித்திபெறுவோர் தொகை, அதிகமாக இருத்தல்.

திறமைசித்தி, விசேட சித்தி பெறுவோர் தொகை மற்றைய பாடசாலைகளிலும் பார்க்கக் கூட இருத்தல்,

சிறந்த விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இருத்தல்.

தொழிற் கல்விக்கான கூடங்களும் உபகரணங்களும் இருத்தல்

எல்லாப் பாடங்களையும் போதிக்கக் கூடிய சிறந்த அறிவும் ஆற்றலுமுடைய ஆசிரியர்களிருத்தல்.

மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட நிர்வாகத்தைத் திறமையாக நடத்தும் அதிபர் இருத்தல்,

இவ்வித காரணங்கள் எல்லாப் பாடசாலைகளிலும் காணப்படுமானால் குறிப்பிட்ட ஒன்று இரண்டு பாடசாலைகளில் மாத்திரம் தம் பிள்ளைகளுக்கு அனுமதி கோரி பெற்றோர் ஏன் செல்லப் போகின்றார்கள்?

இத்தகைய வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதற்கு, கல்வித் திணைக்களத்தாரும் பெற்றோரும் இருபாலாரும் முயலவேண்டும்.

பாடசாலைக்குப் பாடசாலை பெறுபேறுகள் பாரதூரமான வித்தியாசமில்லாவிட்டால், சில பாடசாலைகளுக்கு மாத்திரம் அனுமதி நெருக்கடி ஏற்படாது. ★

ம. பவானி

## "ஷெல்" களஞ்சியம்...

யாதும் "ஷெல்"லே யாவரும் ஓடுவீர்.
'அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை! ஷெல் விழுந்தார்க்கு இவ்வுலகமில்லை'
"கிடங்கு கிண்டி வாழ்வாரே வாழ்வாம் மற்றெல்லாம் ஷெல் விழுந்து பின்மடிவர்"
"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது ஷெல் விழுந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை [illegible]"

க. [illegible]

## தூரத்துத் தண்ணீர்

யாழ் மாவட்டத்தில் 480 பாடசாலைகள் உள்ளன அதில்சிலபாடசாலைகளே பிரபல்யம் பெற்று விளங்குகின்றன அவற்றுள் யாழ் இந்துக்கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, மகாஜனக்கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி என்பன அடங்கும்.

பாடசாலைகளின் வளர்ச்சிக்குஆதரவு வழங்கியவர்கள் அப்பாடசாலைகளுக்கு அண்மையில் உள்ளவர்களே உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கவேண்டும் என்பதற்கிணங்க பாடசாலையை இவ்வளவு பிரபல்யம் பெறவைத்தவர்களைநாம் கடைசிவரை மறக்க முடியாது. அதாவது திறமைக்கு கொடுக்கும் [illegible] வேண்டியது கடமை என்பதை முதலில் உணர்தல் வேண்டும்.

அதனால்40% திறமைக்கும்; 60% வதிவிடத்திற்கும் வழங்குவதை உண்மைநிலை விளங்கியவர்கள் யாவரும் எதிர்க்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

ஆகவே வதிவிடத்திற்கும் திறமைக்கும் ஓரளவேனும் வித்தியாசம் இருக்கவேண்டும்.

உதாரணமாக எமது உடல் நோய்வாய்ப்பட்டால் முதலில் அண்மையில் உள்ள அரசினர் மருத்துவமனைக்கே செல்கிறோம். பின்னர் டாக்டரின் யோசனைப்படி வருத்தத்திற்கேற்ற மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்படுகிறோம் இதைவிடுத்து எடுத்த எடுப்பிற்கு வசதியான அரசினர் மருத்துவமனைக்கு பிரயாணம் செய்வோமாயின் நோயாளியின் உயிரும் உடம்பை விட்டு பிரயாணம் செய்யும்.

எனவே சந்தர்ப்பத்திலும் 'தூரத்து தண்ணீர் அவசரத்திற்கு உதவாது' என்ற பழமொழியை நினைவில்கொள்ளவேண்டும். ★

க. இருஷ்ணராஜ்

சர்ச்சை சக்கரம்

## லெபனான் பாணியில்..

(2ம் பக்க தொடர்ச்சி)

முஸ்லிம் மக்களதும் பள்ளிவாசல் நிர்வாகத்தினரதும் பலத்த எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளவர் இந்த ஆயுதம் தாங்கிய குழுக்கள் இனவாத அரசுக்கே சேவை செய்கின்றனர் என்பதையே அவர்களின் நடவடிக்கைகள். தெளிவுபடுத்துகின்றன.

இனங்களுக்கிடையிலான ஐக்கியம் பேணப்படவேண்டிய இக்கால கட்டத்தில் இனங்களுக்கிடையே விரிசலை ஏற்படுத்த முனையும் சில தீய சக்திகள் இனவாத அரசின் பின்னணியோடு முஸ்லிம் மக்கள் மத்தியிலே உருவாவது கண்டிக்கப்படவேண்டியது.

ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை தமிழ் பேசும் மக்கள், சிங்கள மொழி பேசும் மக்களைவிடவுமே அடக்கு முறையிலிருந்து விடுதலை பெற வேண்டியவர்கள்.

இங்கு வாழும் முஸ்லிம்கள் தனித்துவ மானவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காக ஆயுதப் பயிற்சி பெறுவதையோ, அல்லது ஆயுதங்களை வைத்திருப்பதையோ, விடுதலைக்காகப் போராடும் வேறொரு இனம் தடை செய்யமுடியாது.

### உண்மையான ஜிஹாத்

முஸ்லிம்களின், சமூக நடவடிக்கைகள், தனித்துவம், சுதந்திரம் என்பன பறிக்கப்பட்டாலே அவற்றிற்கெதிராகப் போராடவேண்டும். அதுவே உண்மை ஜிஹாத்தாகும். அன்றி தெருச் சண்டைகளையும், பழைய குரோதங்களையும் இனவாதத்தையும் அடிப்படையாய் வைத்து ஒரு இனத்தின் மேல் யுத்தம் தொடுப்பது ஜிஹாத் ஆகிவிடமுடியாது

ஜிஹாத் என்பது தற்காப்பு யுத்தமே தவிர முஸ்லிம்கள் இன்னொரு இனம் அல்லது சமூகத்தின் மேல் திணிக்கின்ற யுத்தமல்ல என்பதை இங்கு வாழும் முஸ்லிம் இளைஞர்கள் அனைவரும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"சேமியுங்கள்"
பாடசாலை பாக்
மாணவ மணிகளே!
200 மில்க்வைற் நீலசோப் அல்லது
20 பார் சோப் அல்லது
20 சுப்பமில்க் வைற் சோப்
மேலுறைகளை அனுப்பி
பாடசாலை பாக்
ஒன்றைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
-மில்க்வைற் யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

17 - 01 - 1987 சனிக்கிழமை

"மணிவிழா ஆண்டு மலர்"
10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 பார்சோப் அல்லது
2 சுப்பமில்க்வைற் சோப்
மேலுறைகளை அனுப்பி
மில்க்வைற் செய்தி 133 ஐப்
பெற்றுக் கொள்ளுங்கள்.
-மில்க்வைற் யாழ்ப்பாணம்




## யாழ். கலைஞர்களுக்கு நாடகப் பயிற்சி நெறி

எந்தக் கலையில் ஈடுபடும் கலைஞர்களுக்கும் உள்ளார்ந்த திறமைகள் இருப்பது அவசியம். அந்தளவு பயிற்சியும், அக்கலை பற்றிய தத்துவார்த்த அறிவும் அவர்களுக்கு மிக அவசியமாகும். பயிற்சியின் மூலமும் அறிவின் மூலமும் தம் திறனை மென்மேலும் உயர்வாகக் கலைஞர்கள் வளர்த்துக் கொள்ளக்கூடும்.

இவ்வகையில் நாடகக் கலையும் தனக்கென தத்துவார்த்த அறிமுறை சளையும், பயிற்சிகளையும் கொண்டுள்ளது. மேற்கத்திய நாடுகளில், தனியார் நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களும் நாடகப் பயிற்சிக் கல்லூரிகளை நடத்துகின்றன. பல்வேறு நாட்டு நாடகங்களையும் ஆயும் பணியில் உயர் கல்வி நிறுவனங்கள் ஈடுபடுகின்றன.

நாடகத்தில் மிகப் பிரதானமானவன் நடிகனுவான். இப் பயிற்சியில் நடிகன் தன் உடல், உள, குரல், கற்பனை வளங்களை விருத்தி செய்யப் பயில்கிருன். நாடகம் பல கலைகளின் சங்கமிப்பில் உருவாகும் வீரியம் மிக்க ஒரு கலையாகும். சங்கீதம், நடனம், ஓவியம், காட்சியமைப்பு ஒப்பனை ஆகிய கலைகளுடன் தயாரிப்பு, நெறியாக்கை, நிர்வாகம், நாடக விமர்சனம் என்பனவும் நாடகத்தில் சங்கமிக்கின்றன. இவற்றையெல்லாம் பயிற்சிகள் மூலமும், விரிவுரைகள் மூலமும் இதில் ஈடுபாடுடையோர் பெறுகின்றனர்.

நாடகமும் அரங்கியலும் உயர் கல்விக்குரிய ஒரு பாட நெறியாக நமது நாட்டில் அமைந்திருப்பது பலர் அறியாத ஒன்று இலங்கைப் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகளுக்கு 'நாடகமும் அரங்கியலும்' என்பதை ஒரு பாடமாக எடுக்கலாம். யாழ். பல்கலைக்கழகத்தில் இப்பாட நெறி பயிற்றுவிக்கப்படுகிறது.

இந் நிலையில் யாழ் மாவட்ட கலாசார பேரவையினர் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஆதரவுடன் விரிவுரைகளும் -- பயிற்சியும் அடங்கிய ஒரு பயிற்சி நெறியினை யாழ் மாவட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட நாடக ஆர்வலர்களுக்கு அளிக்கவுள்ளனர். இப் பயிற்சி நெறி பயில ஏராளமான விண்ணப்பங்கள் வந்து குவிந்தன. இவற்றுள் 90 பேர் பயிற்சி நெறிக்கு நேர்முகப் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினாலும், நாடகப் புலமை வாய்ந்தவர்களினாலும் விரிவுரைகளும் பயிற்சி நெறியும் அளிக்கப்படவுள்ளன.

14 வாரங்கள் தொடர்ச்சியாக ஞாயிறுதோறும் காலை 8 30 மணி தொடக்கம் 2.00 மணி வரை நடைபெறும் இப் பயிற்சி நெறி, நாடகம் பற்றிய ஒரு காத்திரமான எண்ணக்கருவை பயிற்சியாளர் மத்தியில் ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கிறோம்.

## உலக சமயதின விழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 17

உலக சமயதினவிழா நாளை ஞாயிறுகாலை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம அதிதியாக கல்விப்பணிப்பாளர்திரு. இ. சுந்தரலிங்கம் கலந்துகொள்வார்.

மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தலைமை வகிப்பார்.

இந்துசமயம் பற்றி நல்லை ஆதீன ஸ்வாமிகள் –

கிறிஸ்தவ சமயம் பற்றி வண. க. போ. கோவிந்தராஜ் –

இஸ்லாம் பற்றி மௌலவி எஸ் எச். கலீலுர் ரஹ்மான் –

பஹாய் சமயம்பற்றி இளைப்பாறிய உதவிஉணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம் ஆகியோர் பேசுவர்.

திரு. செ. மகேசு நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவார்.

இலங்கை பஹாய்களின் தேசிய ஆத்மீக சபை இதனை ஒழுங்கு செய்கின்றது. (உ-எ)

## நாடக விரிவுரைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம். ஜன. 17

யாழ் நுண்கலைத் துறையுடன் இணைந்து யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை நடத்தும் நாடகம் பற்றிய விரிவுரைகளும் களப் பயிற்சியும் நாளை ஞாயிறு காலை 9மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் ஆரம்பமாகும்.

கலாசார பேரவைச் செயலாளர் திரு. ச. பொ. பாலசிங்கம் அறிமுகஉரை நிகழ்த்துவார்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன், அரச அதிபரும் கலாசார பேரவைத் தலைவருமான திரு. வி. எம். பஞ்சலிங்கம், கல்வித் துறைப்பீடாதிபதி திரு. நா. பாலகிருஷ்ணன் ஆகியோர் ஆரம்ப உரைகள் நிகழ்த்துவார்கள்.

நாடகக் குழுவின் நடவடிக்கைகள் பற்றி நாடகக் குழு உறுப்பினர் திரு. தா. சு. லோகநாதன், அரங்குபற்றிய படிப்பும் பயிற்சியும் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

பயிற்சி நெறிபற்றிய விளக்கவுரைகளும் இடம் பெறும். (இ-எ-90)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.17

எரிபொருள் தடை காரணமாக வட இலங்கை வைத்தியக் கல்லூரி திறப்பது எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

இம்மாதம் 19 ஆம் திகதி கல்லூரி ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது. (உ-எ)

## நடிகை சுப்புலட்சுமி காலமானர்

சென்னை,ஜன.16

பழம்பெரும் தமிழ் நடிகை எஸ் டி. சுப்புலட்சுமி கடந்த வியாழன் சென்னையில் காலமானர்.

அவருக்கு வயது 71. (உ-எ)

## மாணவர் இரத்த தானம்

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கியின் அனுசரணையுடன் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இரத்ததானம் நேற்று நடைபெற்றது.

நூற்றுக்கும் அதிகமான மாணவ, மாணவியர் இரத்த தானம் செய்தனர். (உ)

## சுன்னுகம் பிரசைகள் குழு கண்டன கூட்டம்

சுன்னுகம், ஜன.17

யாழ் குடாநாட்டுக்குள் எரிபொருள் தடையையும் ஆலயங்களை ஆயுதப்படைகள் அழிப்பதையும் கண்டித்து சுன்னுகம் பிரசைகள் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அரசின்மக்கள்விரோத இச்செயல் உலக அரங்கில் அரசின் நிலையை புரிந்து கொள்ள பெரிதும் உதவியாக இருக்கும் என்பதை சுட்டிக் காட்டி ஜனுதிபதிக்கு கண்டனக் கடிதம் ஒன்றையும் பிரசைகள் குழு அனுப்பி வைத்துள்ளது

இன்று மாலை 4 00 மணிக்கு உடுவில் தமிழ் மான் கலவன் பாடசாலையில் தலைவர் தி மாணிக்கவாசகர் தலைமையில் விசேஷ கூட்டம் ஒன்றும் நடைபெறுகிறது (இ-27)

## இன்று கலைவிழா

யாழ்ப்பாணம், ஜன. 17

அகதிகள் புனர்வாழ்வுக் கழக நிதிக்காக ஆனைக்கோட்டை உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலையம் வழங்கும் கலைவிழா இன்று சனிக்கிழமை உயரப்புலம் அடைக்கல நாயகி கலை அரங்கில் மாலை 5 மணிக்கு நடைபெறும்.

வண. பிதா பி. எம் இம்மானுவல் தலைமை வகிப்பார். (உ-எ)

## ஹோமம் பற்றி உரை

யாழ்ப்பாணம், ஜன. 17

சர்வதேச ஹோம சிகிச்சை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த இந்திய பேராசிரியர் எஸ். ஜி முலே நாளை காலை 10 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் ஹோமத்தின் சிறப்புப் பற்றி உரையாற்றவுள்ளார். (உ-10)

## சாம்7 ஏவுகணையுடனேயே பிரபா வடக்கே வருகை

### 'அத்த' பத்திரிகை செய்தி

கொழும்பு,ஜன 17

தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு.வே பிரபாகரன் சாம் 7 ஏவுகணைகளுடன் தான் யாழ்ப்பாணம் வந்திருக்கிருர்.

இப்படிக் கம்யூனிஸ்ட் கட்சித் தினசரியான 'அத்த' கடந்த வியாழன் செய்தி வெளியிட்டது.

அச்செய்தியில் கூறப் பட்டிருப்பதாவது;

விரைவு படகுகளில் நவீன ஆயுதங்களுடன் இலங்கைக் கடற்படையினர் பாக்கு நீரிணையைக் காவல் புரிகையில் எப்படி பிரபாகரன் யாழ்ப்பாணம் வந்தார்? இப்படி 'அத்த' கேள்வி எழுப்பியிருக்கிறது.

சுதந்திரக் கட்சியின் நாளிதழான 'தினரஸ' கடந்த வியாழன் வெளியிட்ட செய்தியில் கூறப் பட்டிருப்பதாவது;

யாழ்ப்பாணம் வந்த திரு- பிரபாகரன் தனது சகாக்களுடன் ஆலோசனை நடத்தி இருக்கிருர்.

இலங்கை அரசபடைகளின் தாக்குதல்களைச் சமாளிக்கத் தயாராக இருக்கும்படி தனது சகாக்களுக்கு பிரபாகரன் உத்தரவு இட்டிருக்கிருர்

இப்படி தினரஸ செய்தி கூறுகிறது. (உ-ஐ-எ)

## பத்திரிகையாளர்கள் படையெடுப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 17

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு படை எடுக்கத் தொடங்கி உள்ளனர்.

ராய்ட்டர் செய்தியாளர் மரிலின் ஒட்சிமார் யாழ்ப்பாணம் வந்து நான்கு தினங்கள் தங்கி நின்று நிலைமையை அறிந்துகொண்டார்.

அவர் கொழும்பு புறப்படும் சமயம் அமெரிக்காவின் 'டைம்' சஞ்சிகையின் செய்தியாளர் மன்ரோ யாழ். வந்து சேர்ந்தார்.

இன்று (சனி) பிரபல இந்தியப் பத்திரிகையாளரான எஸ். வெங்கட நாராயணன் யாழ் வரவிருக்கின்ருர்.

இதனிடையில் இரட்டையர்களான அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் அன்டர்சன் சகோதரர்கள் தற்சமயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டுவருகின்றனர். (உ-எ-21)

## தடை நீடிக்கும் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ராய்ட்டரின் கொழும்புச் செய்தியாளர் செல்வி மரிலின் ஒட்சிமார் கடந்த வியாழக்கிழமை திரு. டிட்டுவை பேட்டி கண்டார்.

அப்போதுதான் திரு. டிட்டு முன்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

ராய்ட்டருக்கு அளித்த பேட்டியில் திரு டிட்டு மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மத்தியஸ்தத்தின் துணையுடன்தான் இனப் பிரச்சினைக்கான பேச்சுக்களில் நாம் கலந்துகொள்வோம்

இந்தியாவை விடுத்து இலங்கை அரசுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுக்களை நடத்துவார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை.

எரிபொருள் தடை காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார முற்றுகை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலையை மாற்றவில்லை.

தென் இலங்கையில் உள்ள பொருளாதார இலக்குகள் மீதான தாக்குதல்களை வேறு போராளி இயக்கங்கள்தான் மேற்கொண்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இத்தாக்குதல்களில் ஈடுபடவில்லை.

ஆனுல் இலங்கை அரசு பொருளாதார முற்றுகை மூலம் உணவுப்பொருள் விநியோகங்களையும் தொடர்ந்து தடைசெய்ய முற்படுமானுல் தென் இலங்கையில் உள்ள பொருளாதார இலக்குகளைத் தாக்குவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தயங்காது.

உணவுப்பொருள் விநியோகத்தை நிறுத்தி தமிழர்களைப் பட்டினி போட்டு ,பயாபரா' நாட்டு நிலைமையை ஏற்படுத்த அரசு முயலுமானுல் இந்தியா அதனைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு இந்தியா மனப்பூர்வமான முயற்சிகளையே மேற்கொண்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்குமேலாக இந்தியா இம்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது

பொருளாதாரத்தடை போன்ற முட்டாள்தனமான நடவடிக்கைகளில் தான் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

யாழ் குடாநாட்டின் உணவுநிலை இரண்டு, மூன்று வாரங்களுக்கே தாக்குப்பிடிக்க முடியும்.

போர் நிறுத்தம் பற்றியும் பேசப்படுகிறது. இலங்கை அரசுடன் போர்நிறுத்தப் பேச்சுக்களை நாம் நடத்தப் போவது இல்லை.

இப்படி திரு. டிட்டு பேட்டியில் மேலும் தெரிவித்ததாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (உ-எ)

## மூவர் கைது!

சட்ட விரோதமான முறையில் எரிபொருள் கொண்டு வந்ததாகக் கூறப்படும் மூன்று இளைஞர்களைக் கைது செய்த சிப்பாய்கள் அவர்களை ஆனையிறவு தடுப்பு முகாமில் சுலோக அட்டை [illegible] வைத்துள்ளனர். (உ-10)

## உயிரியல்...

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

குளுக்கோஸே மூலப் பொருளாகும்.

யாழ் உயிரியல் தொழில்நுட்ப பிரிவுக்குத் தேவையான உபகரணங்களை உருவாக்குவதற்கு வேண்டிய ஆராய்ச்சிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப கூடத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

எமது அரசாங்க, தனியார் ஸ்தாபனங்கள் ஏற்கெனவே வடிவமைக்கப் பட்ட கைத்தொழிலுக்கு தேவையான இயந்திர சாதனங்களைபிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்ற போதிலும் அவை தொழில் நுட்ப ரீதியில் காலம் கடந்த வையாகவே உள்ளன

இலங்கையிலுள்ளகைத் தொழிலதிபர்கள் தமது முதலீடுகளிற்கு உடனடியாக முதல் வருடத்திலேயே லாபம் கிடைக்க கூடிய உபகரணங்களையும் தொழில் நுட்பங்களையும் நாடுகின்ருர்கள்.

மிகக்குறுகிய காலத்தில் கைத்தொழிலதிபர்களின் அபிலாஷைகளை யாழ் பல்கலைக்கழக உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு நிறைவேற்றும் என எதிர்பார்க்கிறோம்.

## பணியிலி..

(-1ம் பக்கத்தொடர்ச்சி)

போதனைக் கல்வியாக இருந்துவிடாமல், நடைமுறை ரீதியான, செயல் ரீதியான, ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமளித்து உதவும் [illegible] பிரதானம்.

## பிரபா

(2 பக்கத் தொடர்ச்சி)

வில் வெளியான இன்னெரு செய்தி.

இதனிடையில் கொழும்பு ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளோ இலங்கை அரசுக்கு ஏற்றுற்போல பிரபாகரனின் வருகையைப் பற்றிச் செய்திகள் பிரசுரித்தன; பிரசுரித்தும் வருகின்றன.

''பலந் தோப்புக்குள் நடுவில் கூட்டம் ஒன்றில் பிரபாகரன் பேசினுர்'' —இப்படி கொழும்பு 'சன்' பத்திரிகை செய்தி பிரசுரித்து இருந்தது

'ஐலண்ட்' நாளிதழோ'' கார்கள் பவனியில் மிகுந்த பாதுகாப்புடன் பிரபாகரன் யாழ் நகர் வந்தார்'' — என்று செய்தி பிரசுரித்தது.

உலக செய்தி ஸ்தாபனங்களும் பிரபாகரன் யாழ்ப்பாணம் வந்தார் என்று கூறப்படும் செய்தியைவிட்டு வைக்கவில்லை

பி. பி. சி வானெலியோ 'தமிழோசை' மூலம் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் 'பிரபாவின் யாழ். விஜயத்தை பிரபலப்படுத்தியது.

பிரபாவின் யாழ் விஜயம் குறித்து ஏன் இவ்வளவு ஆரவாரம்?

இனப்பிரச்சினைத் தீர்விற்கு பிரபாவின் வாய் அசைவை, இலங்கை, இந்தியா மட்டுமல்ல உலகமே உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் அது உணர்த்துகிறது அல்லவா?

நடைபாதை வியாபாரிகள் 'படையெடுப்பு'

## யாழ் ஸ்ரான்லி வீதியில் போக்குவரத்து நெருக்கடி

யாழ்ப்பாணம், ஜன 17

யாழ்- மத்திய பஸ்நிலையத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நடைபாதை வியாபாரிகள் தற்போது ஸ்ரான்லி வீதியை ஆக்கிரமித்து உள்ளனர்.

இதன் காரணமாக இந்த வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

யாழ்-பஸ்நிலையப் பகுதியில் பொதுமக்கள் நடமாட்டத்தைத் தவிர்த்து வருவதாலும்— ஆரியகுளச் சந்தி, வின்சர் சந்தி ஆகியவற்றிற்கு மினிபஸ் போக்குவரத்து நிலையங்கள் மாற்றப்பட்டதாலுமே நடைபாதை வியாபாரிகள் இந்த இடங்களை முற்றுகையிட்டிருக்கின்றனர்.

வாகனப் போக்குவரத்து கூடிய இவ்வீதிகளுக்கு நடைபாதை வியாபாரிகளும் படையெடுத்து விட்டதால் இப்பகுதியில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. (உ - 10)

## தமிழ்ப் பகுதியிலுள்ள சிங்களப் பாடசாலைகளுக்கு பாதுகாப்பு வழங்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜன 17

தமிழ்ப் பகுதிகளில் உள்ள சிங்களப் பாடசாலைகளுக்கு பாதுகாப்பு வழங்குமாறு படையினருக்கு அரசு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதன் முதல் கட்டமாக வவுனியா-மன்ஞர் வீதிகளில் உள்ள காமினி வித்தியாலய மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும்.

இந்தப் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக்கு மத்திய நிலையமாக பாடசாலைக்கு முன்பாகவுள்ள மாவட்ட மந்திரியின் விடுதி தெரிவு செய்யப் பட்டுள்ளதாக தெரியவருகிறது. (உ-10)

## ஆயுதங்களைக் கிழே---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டுள்ளது.

சிவில் நிர்வாகத்தை தம்வசப்படுத்த தீவிரவாதிகள் முனையும் போது நாம் கைகட்டியபடி பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்ற எமது நிலையை இந்தியா ஏற்றுக் கொண்டது.

இணை அமைச்சர் நட்வர்சிங். அடுத்தவாரம் ரஷ்யா செல்வார்.அதன் பின்னர் இணை அமைச்சர் குழு இலங்கை வரும் திகதி நிர்ணயிக்கப்படும்.

பேச்சுக்களைத் தொடங்கும் போது எரிபொருள் தடைநீக்கம், போர்நிறுத்தம் ஏற்படும் சாத்தியங்கள் உண்டு.

- இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா சொன்ஞர். (அ-எ)

## சுவிஸ். ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சபை, மனித உரிமை சபை, உலக கிறிஸ்தவ திருச்சபை முதலியன விடுத்த வேண்டுகோளை சுவிஸ் அரசு நிராகரித்து விட்டதாகவும் அவர் சொன்ஞர்.

ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்ட 26 தமிழ் அகதிகள் இலங்கையில் எதுவித துன்புறுத்தலுக்கும் ஆளாகாமல் வசிக்கின்ருர்கள்.

தென் இலங்கையில் 7 லட்சம் தமிழர்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்.

தீவிரவாதிகளுடன் தொடர்பு இல்லாவிடில் தமிழர்களுக்கு எதுவித கஷ்டமும் ஏற்படாது— — இப்படி நீதி அமைச்சர் எலிஸபத் சொன்ஞர்

கூட்டுறவாளர்களே!
தொலைபேசி: 22363
கூட்டுறவு அச்சகம்
(யாழ். ப. நோ. கூ. சங்க கிளை)
57, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
குறைந்த செலவோடு நிறைந்த சேவை
சகல விதமான அச்சக வேலைகளுக்கும் யாழ்ப்பாணம் பல நோ. கூட்டுறவுச் சங்க கூட்டுறவு அச்சகத்தை நாடுங்கள்.
குறைந்த செலவில் நிறைந்த சேவை குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
யாழ் நகரின் அனுபவம்மிக்க சிறந்த அச்சக ஊழியர்களின் திறமையைப் பயன்படுத்தி, நவீன அச்சுயந்திரங்களில், புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட எழுத்துக்களிஞல், தரமாக அச்சிட்டு விநியோகிக்க உத்தரவாதமளிக்கின்ருேம்.
தயவு செய்து இன்றே உங்கள் தேவைக்கு வேண்டிய உத்தரவை அனுப்பி வைத்து கூட்டுறவுச் சேவையின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு நல்கும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிருேம்.
கூட்டுறவே நாட்டுயர்வு!!
வளர்க கூட்டுறவு!!
கூட்டுறவு சேவையிலுள்ள,
பொது முகாமையாளர்,
யாழ். ப நோ. கூ சங்கம்.

## உருவாக்கிய உத்தம...

(6-ம் பக்க தொடர்ச்சி)

நித் தக்க பெரியவர்களிடம் பாரம்பரியமாக அறிந்து கொண்டிருந்த தனியாற்றலிஞலேயாம் எனலாம். அபார நினைவாற்றல் வாய்ந்த இவர் பெரியவர்கள் பலரின் பாடல்களையன்றி அவர்கள் விட்டுச்சென்ற விபரங்களைப் பற்றியும் நன்கறிந்த தொடர்புபடுத்தி சேவை செய்திருந்தார்.

இந்த வகையில்பொன்னம்பலம் எனப் பெயர் பெற்றவர்கள், சின்னத்தம்பி எனப்பெயர் பெற்றவர்கள், குமாரசுவாமி எனப் பெயர் பெற்றவர்கள், ஆறுமுகம் என்பவர்கள், விசுவநாதன் என்பவர்கள் சரவணமுத்தர்என்பவர்கள்பலரிருந்தார்கள். இவர்களைப் பற்றி விபரமாக அறிந்திருந்த பண்டிதமணி அவர்கள்,அவ்வப் பெரியவர்களின் ஊர், காலம், தந்தைபெயர், சிறப்புப் பெயர் என்பன பற்றி அறிந்திருந்தார்.

### விபர அறிவு

இத்தகைய விபர வியாபக அறிவு விசேடத்தாலேதான், ஆறுமுகத் தம்பிரான் இருவர், விசுவநாதப் பெரியார் இருவர், சரவணமுத்தர் இருவர் சம்பந்தமாக எழுந்த சந்தேகங்களை இவர் இலகுவில் விடுவித்து உண்மையை விளக்கியுள்ளார்.

பொன்னம்பலப்பெயர் பெற்ற நால்வர் இலக்கியப் பெருமை பெற்றவர்கள் பேர்படைத்த வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை, பொன்னையா உபாத்தியாயர் எனப் பெயர் பெற்றவர், நாவலர் அவர்களின்தமக்கையார் ஒருவரின் மைந்தர். ஆனல் அந்தப் பொன்னம்பலப் பெயர்பெற்றவர் நால்வர் அவரிடம் படித்திருக்கிருர்கள். அந்த மூவரிடத்தும் பண்டிதமணி அவர்கள் படித்திருக்கிருர்கள். அவர்களுள் மூவர் தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள்.

பண்டிதமணி அவர்கள் அந்தப் பெரியவர்களை உரிய உரிய இடங்களில் வைத்துப் பேசியும் எழுதியும் உள்ளார் எனவே அவர்கள் பெயர்களில் மயக்கம் எழுவதில்லை.

கலா நிலையத்தாரின் தீர்ப்பு ஒன்று அண்மையில் அறியக் கிடைத்தது. பண்டிதமணி அவர்கள் சின்னத்தம்பிப் புலவரைப் பற்றியும், பள்ளுப் பிரபந்தம் பற்றியும் எத்தனைமுறை திருப்பித் திருப்பிப் பேசினுலும் பன்னாட் பழகிய திருக்குறள் முதலான நூல்களின் தெவிட்டாத சுவை நிலைத்திருக்கும் என்பதாம்.

அன்றி இவர் சேனுதிராச முதலியார் பற்றியும், சி. வை தாமோதரம்பிள்ளை பற்றியும் பேசியவை அவையோரை அதிசயித்திருக்கச் செய்தன.

(வளரும்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 17 - 01 - 1987

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power-House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org